

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 224 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை (03.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 12, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## உஷ்



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராக நியமிக்கப்படலாம் என்ற செய்தி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக அடிபடுகிறது.

எதிர்வரும் 7ஆம் திகதி சுபதினம் என்பதால் அன்று சில அரசியல் விடயங்கள் அரங்கேறலாம் என்றும் அந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

மஹிந்தவுக்கு பிரதமர் பதவியை கொடுத்தால் முக்கிய அமைச்சுப்பொறுப்பை இப்போதைய பிரதமருக்கு வழங்கவேண்டிவரும் என்பதால் அதுபற்றியும் ஆராயப்படுகிறதாம்.

# இலங்கையில் மத சுதந்திரம் இல்லை!

## சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு அதிரடி அறிவிப்பு

நமது விசேட செய்தியாளர்

இலங்கையில் மத சுதந்திரம் கடந்த வருடம் மோசமடைந்துள்ளதாக காரசாரமான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு, இது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தி...

02 பக்கம்

## கோதுமை மா விலை உயரும்



நமது நிருபர்

கோதுமை மாவுக்கான இறக்குமதி தீர்வை 13 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அதன் விலை உயரும் என அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர் சங்கத்தின் ஆலோசகர் பீ.எம்.அபேசேகர தெரிவித்தார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் பிரதி செயலாளர் டபிள்யூ.ஏ.சரத்குமாரவினால் கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த விலை அதிகரிப்பு இடம்பெறும் என அபேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

கோதுமை இறக்குமதிக்கு தீர்வை விதிக்கப்படாமல் மா இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ளமை காரணமாக மொத்த விற்பனையில் ஏகபோக உரிமை தொடர்பான பிரச்சினை மீண்டும் எழக்கூடும் என அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

## லிட்ரோ விலை குறைகிறது



லிட்ரோ எரிவாயுவின் விலையை இன்று நள்ளிரவு முதல் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாக அந் நிறுவனத்தின்...

02 பக்கம்

## நாடு திரும்பாத 400 வைத்தியர்கள்

இவ்வருடத்தில் பயிற்சிக்காக வெளிநாடு சென்ற 67 விசேட வைத்திய நிபுணர்களும் 400 வைத்தியர்களும் நாட்டுக்கு மீள வருகை தரவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் குறித்த வைத்திய நிபுணர்கள் வெளிநாடு சென்றுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பயிற்சிக்காக வெளிநாடு சென்ற சுமார் 400 வைத்தியர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆதிவாசிகளின் ரிட் மனு செப்டெம்பரில் விசாரணைக்கு

பூர்வீக நிலம் அபகரிக்கப்படுகின்றமைக்கு எதிராக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலெத்தோவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 08ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (02) தீர்மானித்தது.

02 பக்கம்

## பேச்சு வேண்டாம் செயலில் காட்டுக!

### ரணிலுக்கு மனோ அறிவுரை





"இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு, பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்கிறார் ஜனாதிபதி. இதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். ஆனால்,...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

சுதந்திரமா புத்தர் சிலைகளை வைக்கிறதும் மத சுதந்திரம் என்று சொன்னாலும் சொல்லுவாங்கள்





உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்துள்ள இந்திய விமானப் படை தளபதி எயார் சீப் மார்ஷல் வி.ஆர். சௌதாரி, இலங்கை கடற்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவை விமானப்படைத் தலைமையகத்தில் நேற்று (02) சந்தித்தார்.

## காளியை அவமதித்து புகைப்படம் வெளியீடு

### மன்னிப்புக் கோரியது உக்ரைன்

இந்துக் கடவுளான மகா காளியை அவமதிக்கும் வகையில் உக்ரைன் இராணுவம் வெளியிட்ட படம் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து அந்தப் புகைப்படம் நீக்கப்பட்டது.

02 பக்கம்

## மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவம்

### மதுரையில் நேற்று கோலாகலம்

திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது

மதுரை மீனாட்சி-சுந்தரேஸ்வரர் கோயில் சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாணம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கோலாகலமாக நடைபெற்றது.

02பக்கம்

## இந்திய விசா வழங்கும் போலி இணையத்தளங்கள்

### உயர்ஸ்தானிகரகம் எச்சரிக்கை

இந்தியாவுக்கான இ-விசா வழங்குவதற்கு போலியான அல்லது மோசடியான இணையத்தளங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

02 பக்கம்


பணத்தையும் எரிபொருளையும் சேமியுங்கள்

Dialog Smart Energy Monitoring
உடன் உங்கள் generator ஐ ஸ்மார்ட்டாக மாற்றுங்கள்

மின்சார உற்பத்தி பற்றிய தகவல்கள்

அனைத்து தகவல்களையும் உடனடியாக அறிந்து கொள்ளுதல்

எரிபொருள் அளவு மற்றும் பாவனையினை அளவிடுதல்

கற்பித்தல் நேரம் மற்றும் செயல்திறன் தரவு



0777 332 118 business.dialog.lk

உங்கள் வியாபாரத்தின் எதிர்காலம் இன்றே.

Dialog ENTERPRISE

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

## அநுராதபுரத்தில் இருவர் கைது

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த இளைஞரொருவரை வெட்டிக்கொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரு தினங்களுக்கு முன்னர் குறித்த இளைஞரை தாக்கி காயங்களுக்குள்ளாக்கிய பெண்ணொருவர் மற்றும் ஆணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டெலிகொம் வீதி, மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரும் மதவாச்சி விவசாய சேவை மத்திய நிலைய வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் தம்பதியினர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காதல் தொடர்பை காரணங்காட்டி மதவாச்சி பிரதேசத்திலுள்ள ஹெரோயின் வியாபாரிகள் சிலருக்கு இடையில் கடந்த 26ஆம் திகதி மோதல் உருவாகியுள்ளது.

அதன்போது மதவாச்சி, 15ஆம் இலக்கம் மன்னார் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய ருவன் கீத் உதித என்றழைக்கப்படும் இளைஞர் பாரதூரமான காயங்களுக்குள்ளான நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

66 இலக்கம் வார்ட்டில் அவர் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் கடந்த 28ஆம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்த வார்ட்டுக்குள் நுழைந்த நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மேலும் சந்தேகநபர்கள் மூவரை கைதுசெய்யவுள்ளதாகவும், கைதுசெய்யப்பட்ட தம்பதியினரை மதவாச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் விவகாரம்

# ஜனாதிபதியுடன் விரிவான கலந்துரையாடலை தொடர்ந்தும் எதிர்பார்க்கும் பல்கலை ஆசிரியர்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இன்று வாய்ப்பு கிடைக்குமென நம்புவதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களை க.பொ.த உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி நடவடிக்கையில் இருந்து விலகிக் கொள்ளத் தூண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை நடத்த நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதியிடம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடலுக்கான திகதி உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி செயலகம் தமக்கு அறிவித்துள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன ஊடகப் பேச்சாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்தார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன உறுப்பினர்கள் அரசாங்கம் சமீபத்திய வரி உயர்வை திரும்பப் பெற வேண்டும் என கோரி முழு அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

வரி உயர்வு நியாயமற்றது என்றும், தங்களுக்கு சுமை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கல்வி அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையில் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கடந்த வாரம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன உறுப்பினர்கள் விரிவுரைகளுக்குத் திரும்புவதாக அறிவித்தனர். ஆனால் யுஃடு பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் பங்கேற்பது ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்குப் பின்னரே சாத்தியமாகும் என தெரிவித்தனர்.

இதேவேளை, பரீட்சைகள் திணைக்களம் ஏற்கனவே விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஓரளவு ஆரம்பித்துள்ளது.

தமிழ் மொழிமூலமான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்புடன் தொடங்கப்பட்டுள்ளது.

### இந்திய விசா...

| Sl No. | Fake e-Visa URL noticed so far |
|---|---|
| 1 | https://www.indiaimmigration.in/ |
| 2 | http://indianevisagov.in/ |
| 3 | http://indiavisa.co.in/ |
| 4 | http://indianvisaonline-gov.in/ |
| 5 | http://indianvisaonline.org.in/ |
| 6 | http://indiantouristvisa.org.in/ |
| 7 | http://indiavisa.org.in/ |
| 8 | http://e-visaindia.org.in/ |
| 9 | http://indianetouristvisa.co.in/ |
| 10 | http://onlinevisaforindia.org.in/ |
| 11 | http://visatoindia.org.in/ |
| 12 | http://evisaindia.org.in/ |
| 13 | http://indiaonlinevisas.org.in/ |
| 14 | http://evisatoindia.org.in/ |
| 15 | http://indianevisaonlinegov.in/ |
| 16 | http://indianvisaaonline.org.in/ |
| 17 | http://etavisa.in/ |
| 18 | http://evisastoindia.org.in/ |
| 19 | http://indiaetouristvisa.co.in/ |
| 20 | http://etaindia.org.in/ |
| 21 | http://onlineindianvisa.org.in/ |
| 22 | http://urgentindianvisa.org.in/ |
| 23 | http://evisa-india.in/ |
| 24 | http://indianbusinessvisa.org.in/ |
| 25 | http://evisaindia.in/ |
| 26 | http://emergencyindianvisa.org.in/ |
| 27 | http://indianvisasaonline.org.in/ |
| 28 | http://indianimmigration.org.in/ |
| 29 | http://indianvisas,in/ |
| 30 | http://indianevisagov.in/ |
| 31 | http://indianeservices.in/ |
| 32 | http://www.india-visa-gov.in/ |
| 33 | https://www.indian-evisas.org.in/ |
| 34 | https://www.indiavisaonline.org.in/ |
| 35 | https://www.india-visa-gov.in/ |
| 36 | https://indianvisasgov.in |
| 37 | https://www.indian-visa.in/ |
| 38 | https://indiaevisaonlinegov.in/ |
| 39 | https://www.evisa-india.org.in |
| 40 | https://oci.org.in |
| 41 | info@evisa-india.org.in |
| 42 | www.indianetv.in |
| 43 | https://indianvisaservice.org.in/ |
| 44 | https://emergencyvisaindia.org.in/ |
| 45 | https://www.visahq.com/india/ |
| 46 | http://etaindiaonline.com/ |
| 47 | https://www.ivisa.com/ |
| 48 | http://evisaindia.com/ |
| 49 | https://travelvisabookings.com/ |
| 50 | https://visacentral.com/ |
| 51 | https://cibtvisas.com/ |
| 52 | https://www.indiavisacorp.com/ |
| 53 | https://www.globalvisacorp.com/ |
| 54 | https://indian-evisa.com/ |
| 55 | https://www.indianevisaonline.com/ |
| 56 | https://goindiavisa.com/ |
| 57 | https://i-visaindia.com/ |
| 58 | https://etv-in.com/ |
| 59 | https://www.e-touristvisa.com/ |
| 60 | https://www.indiaonlinevisa.com/ |
| 61 | https://indianetouristvisacoin.wordpress.com |
| 62 | https://www.e-visaindiaonline.com/ |
| 63 | https://indiaeta.com/ |
| 64 | http://e-indianvisa.com/ |
| 65 | http://e-indiagency.com/ |
| 66 | http://etouristvisas.com/ |
| 67 | https://www.online-eta.com/home.php |
| 68 | http://indiavisa.com/ |
| 69 | http://indiavisa.com/ |
| 70 | http://indiavisainfo.com/ |
| 71 | http://indianvisagov.com/ |
| 72 | http://e-touristvisaindia.com/ |
| 73 | http://indian-visagov.com/ |
| 74 | http://bls-tvoa.com/ |
| 75 | http://india.evisa-agency.com/ |
| 76 | http://indiavisa-in.com/ |
| 77 | http://indiaivsa.com/ |
| 78 | http://indianvisagov.com/ |
| 79 | http://indianonlinevisa.com/ |
| 80 | http://evisaindiaform.com/ |
| 81 | http://www.bisertravel.com.mk/ |
| 82 | http://e-visaindia.com/ |
| 83 | https://www.jsdimmigration.com/ |
| 84 | http://india.travisa.com/ |
| 85 | https://www.indiae-visa.com/ |
| 86 | https://www.itseasy.com/visa-expediting/india/ |
| 87 | https://www.india-visa-online.com/ |
| 88 | https://www.traveldocs.com/travel-services/indian-e-tourist-visa |
| 89 | https://www.touristvisaonline.com/india-visa |
| 90 | https://www.evisa-india-online.com/ |
| 91 | https://indian-e-visa.com/ |
| 92 | https://btwvisas.com/visa-online/e-visa-india |
| 93 | https://www.akbartravels.com/visa/generic-indiainternational |
| 94 | https://indiantravelvisa.com/ |
| 95 | https://travelexpress.us.com/ |
| 96 | https://indianvisaonlinegov.com |
| 97 | https://visasimple.com/visitorvisa/etv |
| 98 | https://visafirst.com/en/india-visas/india-tourist-visa/ |
| 99 | https://www.onlinevisa.com/india-visa/ |
| 100 | https://indiaevisaservice.com/ |
| 101 | https://atlaspvs.com/e-visa/ |
| 102 | https://visadone.com/india-visa-online/ |
| 103 | https://www.visagov.com/en/ind-visa-for-india |
| 104 | https://india-e-visa.com/ |
| 105 | https://evisa-indian.com/ |
| 106 | https://www.natvisa.com/india-visa |
| 107 | https://www.indiavisa.com.sg/ |
| 108 | https://www.jsdimmigrations.com/ |
| 109 | https://www.travisa.com/india-evisa |
| 110 | https://visa-to-india.com/book-an-eta |
| 111 | https://www.indianonlinevisas.org/ |
| 112 | https://www.indiaonlinevisa.org/ |
| 113 | https://www.indianimmigration.org/ |
| 114 | https://indiaevisas.org/ |
| 115 | https://www.india-visaonline.org/ |
| 116 | https://www.indian-visaonline.org/ |
| 117 | https://www.indianvisa-online.org/ |
| 118 | https://india-visas.org/ |
| 119 | https://www.evisaindia.org/ |
| 120 | https://www.indiaimmigration.org/ |
| 121 | http://www.indianevisaonline.org/ |
| 122 | http://visatoindia.org/ |
| 123 | http://indiavisa.org/ |
| 124 | http://evisaindiaonline.org/ |
| 125 | http://evisatoindia.org/ |

இந்திய விசாவைப் பெறுவதற்கு போலியான இணையத்தளங்களைப் பயன்படுத்த வேண்டாமெனக் கோரியுள்ள உயர்ஸ்தானிகரகம், அவை தொடர்பான விபரங்களையும் வெளியிட்டுள்ளது.

# 03 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் கேகாலை, பதுளை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல மற்றும் பசறை பிரதேச செயலகப் பகுதிகளுக்கும், கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலகப் பிரிவுக்கும், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல மற்றும் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

### லிட்ரோ விலை...

தலைவர் முதித பீரிஸ் நேற்று (02) ஊடகங்களுக்கு தெரிவித்தார். அதன் பிரகாரம் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 100 ரூபாவினால் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய எரிவாயு சிலிண்டர்களின் விலையும் குறைக்கப்படுமென்றும் அது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்படுமெனவும் முதித பீரிஸ் தெரிவித்தார்.

### பேச்சு வேண்டாம்...

இந்தக்கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னிருந்து சொல்லி வருகிறீர்கள். பெப்ரவரி 04ஆம் திகதியளவில் தீர்வு காண்போம் என்றும் கூறினீர்கள். இப்போதும் மீண்டும், மீண்டும் கூறுகிறீர்கள். இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ்ப் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச்சினை தொடர்பில், உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார். ஆனால், இனி நீங்கள் பேச்சை நிறுத்தி, செயலில் காட்டுங்கள். "வோக் யுவர் டோக் மிஸ்டர் பிரசிடென்ட்" (பேச்சின்படி நடந்து காட்டுங்கள்) என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மே தின உரை தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் இன்று இருக்கும் பெரும்பான்மை கட்சித் தலைவர்கள் மத்தியில், தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் காத்திரமான முயற்சிகளை எடுத்தவர், ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரை பற்றி சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும், ஜனாதிபதியாக விக்கிரமசிங்க நியமனம் பெற்ற பின் பலமுறை இந்த கால அட்டவணைக்குள் இனப்பிரச்சினை தீர்வு என பலமுறை கூறிவிட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும்.

சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற்கட்டமாக 13ஐ பற்றி பேசியபோது அதுவரை ஒளிந்திருந்த பௌத்த பிக்குமார் தெருவுக்கு வந்தார்கள். அத்துடன் அது நின்று போய் விட்டது. இன்று 'அரகல' போராட்டத்துக்கு பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு, சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு, ஜனாதிபதி விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை தீர்வுபற்றி, தமிழ்க் கட்சிகளை அழைத்து பேச முன் சிங்களக் கட்சிகளை அழைத்து நாட்டின் உண்மை நிலைமை பற்றி பேச வேண்டும். சிங்கள மக்களை விளித்து நேரடியாக கூற வேண்டும். இனிமேலும் இதை தள்ளிப்போட முடியாது என எடுத்துக்கூற வேண்டும். சர்வதேச சமூகமும் அதற்கு சாதகமாக நடந்துகொள்ளும் என நான் அறிகிறேன்.

தற்போது நிலைமையை பாருங்கள். 'இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு', 'பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்' என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு கிழக்கில் காணி பறிபோகிறது. தொல்பொருள் திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகிவிட்டது. சிவனை தூக்கி கடாசி விட்டு, பௌத்த பிக்குகள், இராணுவ துணையுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கிறார்கள். காவி உடையில் அரசியல் செய்யும் பௌத்த பிக்குவை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு இதுதான் வேளை. இல்லாவிட்டால் கடும் பதற்ற நிலைமை வடக்கு, கிழக்கில் விரைவில் உருவாகும்.

மலைநாட்டில், வந்தவன், போனவன் எல்லாம் அடாத்தாக தோட்டக் காணிகளை பிடிக்கிறான். ஆனால், 200 வருட வரலாற்றை தொட்டு விட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வாழ, பயிர்ச் செய்ய காணி இல்லை. மலையக தமிழருக்காக நான் குரல் கொடுத்தால், என்னை 'தேயிலை கொழுந்து பறிக்க வந்தவன்' என்கிறார்கள். 'தோட்டக்காட்டான்' என்கிறார்கள். இது மலைநாட்டு பெருந்தோட்ட பகுதிகளில் கடும் பதற்ற நிலைமையை மெதுவாக உருவாக்கி வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

# நானுஓயாவில் புதைக்கப்பட்ட 1400 கிலோ அரிசி மீட்பு

(செ.திவாகரன்)



நானுஓயா கிளாசோ தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 400 கிலோ கிராம் அரிசி பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நேற்று (02) மீட்கப்பட்டது.

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா கிளாசோ தோட்ட நிர்வாகத்தின் ஊடாக கடந்த காலங்களில் அரிசி விலை அதிகரித்து இருந்தபோது தோட்டத் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்வதற்காக மூவாயிரம் கிலோகிராம் அரிசி கொண்டுவரப்பட்டது.

அதில் ஆயிரத்து 600 கிலோகிராம் அரிசியை தொழிலாளர்களுக்கு விற்பனை செய்துவிட்டு மிகுதியான ஆயிரத்து 400 கிலோ கிராம் அரிசி அறையொன்றில் பூட்டி வைக்கப்பட்டிருந்துள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியமை குறித்து பொதுமக்கள் கண்காணித்துள்ளனர். காலாவதியான நிலையில் தோட்ட நிர்வாகத்தின் ஊடாக அவை கடந்த நாட்களில் குழிதோண்டி புதைக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

நானுஓயா பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி பாவனைக்குப் பொருத்தமற்று புதைக்கப்பட்ட இடத்தினை கண்டறிந்து மீண்டும் தோண்டி எடுத்துள்ளனர்.

குறித்த அரிசி கொண்டுவரப்பட்டு இரண்டு ஆண்டுக்கு மேல் ஆனதால் கெட்டுப் போய் அதிக துர்நாற்றம் வீசுவதாகவும் இதன் மாதிரிகளையும் பரிசோதனைக்காக எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

### காளியை...

இதற்கு நாங்கள் இந்து மக்களை மதிக்கிறோம். மன்னிப்பு கேட்கிறோம் என உக்ரைன் வருத்தம் தெரிவித்துள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நீண்ட நாட்களாக யுத்தம் இடம்பெற்று வருகிறது. சமீபத்தில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் கிடங்குகளில் தாக்குதல் நடந்தது. இதில் எண்ணெய் கிடங்குகள் பற்றி எரிந்தன. இதனையடுத்து உக்ரைன் இராணுவம் அதன் சமூக வலைத்தளத்தில் எண்ணெய் கிடங்கு பற்றி எரிந்த புகைப்படத்தை வெளியிட்டிருந்தது.

அதற்கு அருகிலேயே அந்தப் படத்தை வைத்து, மகா காளியின் உருவத்தை, ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோவின் பிரசித்தி பெற்ற புகைப்படம் போல் மாற்றம் செய்து, மற்றொரு புகைப்படமும் வெளியிட்டிருந்தது. இதன் காரணமாக இந்துக்கள் பலரும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து அந்தப் புகைப்படத்தை உக்ரைன் இராணுவம் நீக்கியது.

### இலங்கையில்...

நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை வலியுறுத்தியுள்ளது.

மேலும், இலங்கையை சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில் இணைக்குமாறும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

உலக நாடுகளின் மத சுதந்திரம் குறித்து சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு 98 பக்க அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு இலங்கையில் மத சுதந்திரமானது கவலையளிக்கும் விதத்தில் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் சிறுபான்மையினரான இந்துக்களினதும் முஸ்லிம்களினதும் உரிமைகளை மீறும் வகையில் சட்டங்களைப் பயன்படுத்தி அவர்களுக்கெதிரான பாகுபாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் சொத்துகளை அபகரிக்கும் நோக்கில் நில அபகரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காலிமுகத்திடல் போராட்டக் காரர்களுக்கு ஆதரவாக சமூக ஊடகங்களில் செய்திகளை வெளியிட்ட முஸ்லிம்கள், சிவில் சமூகத்தினர் அடையாளங்காணப்பட்டு கைதுசெய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1979ஆம் ஆண்டு இலங்கையில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமானது, தனி நபர்களைத் தேடுவதற்கும் கைதுசெய்வதற்கும் தடுப்புக் காவலில் வைப்பதற்கும் பரந்த அதிகாரங்களை அதிகாரிகளுக்கு வழங்குகிறது. இதன் காரணமாக ஏறக்குறைய 300 முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இந்தச் சட்டமானது சிறுபான்மையினரின் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது. போராட்டத்தில் அரச எதிர்ப்பாளர்களை ஒடுக்குவதற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தை அதிகாரிகள் பயன்படுத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட மூன்றுபேரை எந்தவொரு சாட்சியமும் இல்லாமல் 90 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டார். இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாளர்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆணைக்குழுவின் அறிக்கையில், அந்நாட்டு இராஜாங்க திணைக்களம் விசேட கவனம் செலுத்த வேண்டிய நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் அல்ஜீரியா, அசர்பைஜான், மத்திய ஆபிரிக்க குடியரசு, எகிப்து, இந்தோனேசியா, ஈராக், கசகஸ்தான், மலேசியா, இலங்கை, துருக்கி, உஸ்பெகிஸ்தான் ஆகிய 11 நாடுகள் உள்ளடங்குகின்றன.

### ஆதிவாசிகளின்...

ரம்புக்கன் ஓயா பிரதேசத்தில் உள்ள தமது பாரம்பரிய பகுதிகளை துப்புரவுபடுத்தி அவற்றை பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனங்களுக்கு வழங்க மகாவலி அதிகார சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக ஆதிவாசிகளின் தலைவர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு சோபித ராஜகருணா, தம்பிக கணேபொல ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று ஆராயப்பட்டபோதே செப்டெம்பரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

தமது பூர்வீக நிலம் தனியாருக்கு விற்கும் வகையில் மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், தமது சமூகத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியாகுமென ஆதிவாசிகளின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மீனாட்சி...



வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த திருக்கல்யாண மண்டபத்துக்கு, சிறப்பு அலங்காரத்தில் மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர் எழுந்தருளினார். சிவாச்சாரியார்களால் வேத மந்திரங்கள் ஓதப்பட்டு, சுவாமியின் பிரதிநிதியாக பக்தர்கள், செவ்வாய்க்கிழமை காலை 8.38 மணிக்கு, மாலை மாற்றும் வைபவத்தை நடத்தினர். தொடர்ந்து, மணக்கோலத்தில் தனி வாகனத்தில் எழுந்தருளிய மீனாட்சியம்மனுக்கு மங்கல நாண் அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து, மங்கல அரசியான மீனாட்சிக்கும் பிரியாவிடையுடன் சுந்தரேஸ்வரருக்கும் மகா தீபாராதனை, பூஜைகளுடன் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது.

திருக்கல்யாண வைபவத்தை ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேரிலும் ஊடகங்கள் வாயிலாகவும் கண்டு தரிசித்தனர். மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவத்தையொட்டி, கோயிலில் கூடியிருந்த பெண்களும் தங்களது மங்கல நாணை மாற்றிக்கொண்டனர்.

சித்திரைத் திருவிழா கடந்த மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து, தினமும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் சுவாமி, அம்மன் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாசி வீதிகளில் உலா வந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகமும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திக்கு விஜயமும் நடைபெற்றன.

இதில் முக்கிய நிகழ்வான மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் செவ்வாய்க்கிழமை காலை கோலாகலமாகத் தொடங்கியது. இந்த விழாவை முன்னிட்டு, திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமியும், பவளக்கனிவாய் பெருமாளும் காலை 6 மணிக்கு திருக்கல்யாண மண்டபத்துக்கு எழுந்தருளினர். அதன் பின்னர், சுந்தரேஸ்வரர் மற்றும் மீனாட்சி அம்மன் தனி வாகனத்திலும் நான்கு சித்திரை வீதிகளைச் சுற்றி வந்து, முத்துராமய்யா மண்டபத்தில் கன்னி ஊஞ்சலாகி, வடக்காடி வீதியில் உள்ள திருக்கல்யாண மண்டபத்துக்கு எழுந்தருளினர்.

இதைத் தொடர்ந்து, வேத, மந்திரங்கள் முழங்க காலை 8.35 மணிக்கு மேல் காலை 8.59 மணிக்குள் மிதுன லக்னத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான கருத்துக்கணிப்பு செயற்பாடுகள் 31 வரை நீடிப்பு



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் பொது மக்களின் நிலைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்படவுள்ளதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள் தமது யோசனைகள் மற்றும் நிலைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

அதற்காக முன்வைக்கப்படும் யோசனைகள் மற்றும் நிலைப்பாடுகளை எழுத்துபூர்வமாக அறிவிக்குமாறு அமைச்சு மேலும் கூறியுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை justice media07@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடம் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த யோசனைகளையும் ஆலோசனைகளையும் கவனத்தில் கொண்டு புதிய சட்டமூலத்தை தயாரிக்கவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீள்குடியேற்றத்திலுள்ள சமூக தனித்துவத்தை உணர்ந்தவர் சல்மான்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எச்.எம்.சல்மானின் மறைவால் முஸ்லிம் சமூகம் நல்லதொரு புத்திஜீவியை இழந்திருப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவரது அனுதாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

## ரிஷாட் எம்.பி. அனுதாபம்



"புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவராக இருந்த மர்ஹூம் சல்மான், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தில் கணிசமான பங்களிப்பை நல்கிய பெருந்தகை.

குறிப்பாக, வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் ஒரு சமூகத்துக்குள்ள தனித்துவ அடையாளத்தைப் புரிந்து செயலாற்றியவரும் இவர்தான்.

சட்டப் புலமையில் அவரிடமிருந்த நுணுக்கம் பெருந்தலைவர் அஷ்ரஃபுக்கும் பல தடவைகள் உதவியிருந்தன. பாராளுமன்ற உறுப்பினராயிருந்த அவர், வாக்குறுதியைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் இன்னும் பிரகாசிக்கின்றன.

நிச்சயமாக, நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை வந்தடைந்தே தீரும்" என்கிறது இறைமறை. எனவே, இறைவனின் நாட்டத்தில் நம்பிக்கை வைத்து அன்னாருக்காகப் பிரார்த்திப்போம். எல்லாம் வல்ல அல்லாஹ் அவருடைய குடும்பத்தினருக்கு பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 20 ம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** – உங்கள் பகைவர்கள் விநயமாக நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும்.

**ரிஷபம்** – போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடி சாதனை படைப்பீர்களா. குழந்தைகளால் மகிழ்ச்சி.

**மிதுனம்** – தொலை நோக்கு சிந்தையோடு இன்று வேலைகளைஆரம்பிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**கடகம்** – பண வருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விட மாட்டீர்கள். விடா முயற்சி வெற்றியைத் தரும்.

**சிம்மம்** – குடும்பத்துக்கான செலவுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம். ஆனாலும் சாமாளித்துக் கொள்வீர்கள்.

**கன்னி** – விருந்துபசாரங்களில் அல்லது குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். பரிசுப் பொருள்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்** – அதிக கோபத்தாலும் ஆணவத்தாலும் புத்தி இழந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீண் பயணம் வேண்டாம்.

**விருச்சிகம்** – பொருள் தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் லாபமும் உண்டு.

**தனுசு** – தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

**மகரம்** – வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும்.கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**கும்பம்** – உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தன பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும்.

**மீனம்** – சமூகத்திலும் தொழிலிடத்திலும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். உங்கள் துணைவியிடமிருந்து ஆறுதல் கிடைக்கும்.

| | |
|---|---|
| **திதி** | : திரயோதசி பி.ப.11.49 வரை பின் சதுர்தசி (வளர்) |
| **நட்சத்திரம்** | : அஸ்தம் பி.ப.8.56 வரை பின் சித்திரை |
| **யோகம்** | : சித்த யோகம் பி.ப.8.56 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப. 8.53 – 9.53 மணி வரை |
| **ராகு காலம்** | : 11.53 – 1.23 மணி வரை |
| **எமகண்டம்** | : 7.23 – 8.53 மணி வரை |
| **குளிகை** | : 10.23 – 11.53 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிஷ்டம்** | : கார்த்திகை,உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : பிரதோஷ விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# புளுமெண்டல் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒன்பது பேர் காயம்

## கட்டுநாயக்க நெடுஞ்சாலை நிர்மணப் பொருட்களை திருட முயற்சித்ததால் கைகலப்பு





புளுமெண்டல் பகுதியை அண்மித்த துறைமுக பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பொருட்களை திருடுவதற்கு இருவர் முயற்சித்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இதனைத் தடுப்பதற்கு, அங்கு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தனியார் பாதுகாப்பு அதிகாரிகள் முயற்சித்த போதிலும் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அதிகாரிகளை தாக்கியதால் மோதல் நிலை உருவாகியது.இதன்போது பாதுகாப்பு அதிகாரியொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 09 பேர் காயமடைந்ததாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்நிலையில், கொழும்பு துறைமுகத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளுக்காக வைக்கப்பட்டுள்ள இரும்புப் பொருட்கள் உள்ளிட்ட உபகரணங்கள் கடந்த சில தினங்களாக திருடப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

துறைமுகப் பிரதேசத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலிகளை உடைத்து சிலர் உள்நுழைய முயற்சிப்பதாகவும் முறைப்பாடுகள் கிடைப்பதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இனந்தெரியாத நபர்கள் சிலரினால் நேற்று முன்தினம் (01) இரவு துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீதியுடன் தொடர்புடைய சில இரும்புப் பொருட்கள் திருட முயற்சித்துள்ளார்கள். கொழும்பு முதல் கட்டுநாயக்க வரையான அதிவேக நெடுஞ்சாலை கொழும்பு துறைமுக நகரத்துடன் இணைந்தே செல்கிறது. அந்த வீதி துறைமுக நகர் வரையில் பாலமாகவே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று, கொழும்பு துறைமுகத்துக்குள்ளேயே இந்த நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால், இந்த வீதி நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பிரதேசங்களில் நிர்மாணத்துக்காக கொண்டுவரப்படும் இரும்புப் பொருட்கள் உள்ளிட்ட சில உபகரணங்கள் திருடப்படுவதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமை, நேற்று முன்தினம் (01) துறைமுகத்தின் ஆறாவது நுழைவாயிலுக்கு அருகில் அதாவது புளுமெண்டல் பிரதேசத்துக்கு அருகில் இருந்த இரும்புப் பொருட்களை திருடுவதற்கு இருவர் முயற்சித்துள்ளனர்.

இந்நிலையில், திருடுவதற்கு வந்த சந்தேகநபர்கள் இருவரையும் தடுப்பதற்கு தனியார் பாதுகாப்பு அதிகாரிகள் முயற்சித்தனர். அந்த சந்தர்ப்பத்தில், புளுமெண்டல் பிரதேசத்தில் வசிக்கும் சிலர் அங்கு ஒன்றுகூடி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருவரையும் தாக்கியுள்ளனர்.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த துப்பாக்கியை திருடவந்த நபரொருவர் எடுத்துக்கொண்டுள்ளார். அதனையடுத்து, அந்த துப்பாக்கியை பாதுகாத்துக்கொள்வதற்காகவும் அவர்களின் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவும் முயற்சித்திருந்தார்கள். இருந்தபோதும், அதிகாரிகளை தடிகளால் தாக்கியுள்ளார்கள்.

இந்நிலையில், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மற்றைய பாதுகாப்பு அதிகாரி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டில் ஆண்கள் ஐவரும் பெண்கள் நால்வரும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பெண்கள் நால்வருள் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றிருந்த நிலையில் மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ளார். ஏனைய எட்டு பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச் சம்பவம் தொடர்பில் கரையோர பொலிஸாரினால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

துறைமுகத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலிகளை உடைத்து சிலர் உள்நுழைய முயற்சிப்பதாகவும் முறைப்பாடுகள் பாதிவாகியுள்ளன. அதனூடாகவே இந்த இரும்புப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

ஆகவே, புளுமெண்டல் பகுதியிலுள்ள மக்கள் அனுமதியின்றி துறைமுகத்துக்குள் நுழைவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு உள்நுழைந்தால் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதுடன் பாதுகாப்பு அதிகாரிகளும் இந்த பிரதேசத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெளிநாட்டு நிறுவனமொன்றே இந்த நிர்மாணப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அங்கிருக்கும் பொருட்களை திருடுவது, குழுக்களாக இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டு குழப்பம் விளைவிக்க முயற்சிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு கோருகிறோம். இந்தச் சம்பவத்தில் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

விவசாய நிலங்களை பாதுகாத்துக்கொள்ள உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தனிநபர்களுக்கு துப்பாக்கி பெற்றுக்கொடுப்பது போன்று தனியார் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் துப்பாக்கி பெற்றுக்கொடுக்கப்படும். வங்கிகளிலும் இவ்வாறு தனியார் பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாகிகளுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஆகவே, திருட்டுச் சம்பவங்கள், குற்றங்கள், உயிர்ப் பாதுகாப்பு, நபர்களின் பாதுகாப்பு தொடர்பில் தனியார் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அதிகாரம் இருக்கிறது.

குறித்த அதிகாரி துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தாலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை போன்றே தென்படுகிறது. மற்றைய அதிகாரியின் கையிலிருந்த துப்பாக்கி திருடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.





**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நீக்குமாறு கோரியும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பக்கச்சார்பற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைப்பினால் கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக நேற்று (02) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**
**(படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)**

# பயாகலையில் கிரிக்கெட் போட்டி; மாணவர்களுக்கிடையில் மோதல்

## மாணவரொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதி

களுத்துறை, பயாகலைப் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியை தொடர்ந்து மாணவர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தின்போது மாணவரொருவர் படுகாயங்களுக்குள்ளாகியதாக பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதுபோன்ற விளையாட்டு போட்டிகளை ஏற்பாடு செய்யும்போது சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள் பொலிஸாருக்கு முன்னறிவித்தலை வழங்கி பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பயாகலை பிரதேசத்திலுள்ள விளையாட்டு மைதானமொன்றில் கடந்த 30 ஆம் திகதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியொன்று நடத்தப்பட்டது. கிரிக்கெட் போட்டி நிறைவடைந்ததன் பின்னர் இரு பாடசாலைகளின் மாணவர்கள் குழப்பமடைந்துள்ளனர். அதனை தொடர்ந்து தாக்குதல்களும் இடம்பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது. அதன்போது, அங்கு பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்ததால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர். ஆனால், அந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

தனது மகன் மீது வேறு பாடசாலை மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அந்த தாக்குதலினால் தனது மகன் காயங்களுக்குள்ளாகி நாகொட மருத்துமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இன்று (நேற்று) காலை மாணவரொருவரின் தாயார் பயாகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். 18 வயதுடைய மாணவரொருவரே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பயாகலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இருந்தபோதும், காயம் ஏற்படுமளவுக்கு தாக்குதல் சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் இரு பாடசாலைகளினதும் மாணவர்களும் மைதானத்துக்கு வந்ததும் குழப்ப நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டதாகவும் காயம் ஏற்படுமளவுக்கு இரு தரப்பினருக்குமிடையில் தாக்குதல்கள் இடம்பெறவில்லை என்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அறிவித்திருந்தார்.

இச் சம்பவத்தின்போது, பயாகலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் பகிரப்படுகின்றன. அது உண்மைக்கு புறம்பான செய்தியாகும். அவ்விடத்தில் அவர் கடமையில் இருந்திருந்தாலும் அவ்வாறான தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை என்று குறித்த பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இச் சம்பவத்தில் காயங்களுக்குள்ளான மாணவன் தன் மீது தாக்குதல் நடத்தியவரை அடையாளம் கண்டுள்ளதுடன், காயங்களுக்குள்ளான மாணவனின் தயாரும் தாக்கிய மாணவன் தொடர்பான சில தகவல்களையும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெறும் விளையாட்டுப்போட்டிகளின்போது கடந்த காலங்களில் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்களினால் மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு ஏற்பாடு செய்யப்படும் போட்டிகளின் நிறைவில் வெற்றி தோல்வியை பொறுத்து முரண்பாடுகள் ஏற்படக் கூடும். அதனால் மாணவர்கள் காயங்களுக்குள்ளாகுவது மாத்திரமின்றி வேறு சிக்கல்களுக்குள்ளாகக் கூடும். அதனால், இவ்வாறான போட்டிகளை ஏற்பாடு செய்யும்போது இந்த போட்டிகளை ஏற்பாடு செய்யும் பாடசாலைகளின் அதிபர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஒருசில பாடசாலைகளை எடுத்துக்கொண்டால் ஆயிரக் கணக்கான மாணவர்கள் இருப்பார்கள். அவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த முடியாது. பொலிஸாரை பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தினாலும், ஆயிரம் மாணவர்களை ஒரே நேரத்தில் கட்டுப்படுத்தவும் முடியாது. எனவே, போட்டிகளை ஏற்பாடு செய்யும்போது, போட்டித் தினத்துக்கு முதல் நாளிருந்தே பொலிஸாருடன் கலந்துரையாடி முறையான ஏற்பாடுகளை செய்யவும் ஒழுக்க ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# பஸ் - லொறி மோதி விபத்து எண்மர் காயம் - மாரவிலயில் சம்பவம்

மாரவில, முதுகடுவ பிரதேசத்தில் நேற்று (02) அதிகாலை பஸ் ஒன்றும் லொறியொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் காயங்களுக்குள்ளான 08 பேர் மாரவில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாரவில தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரையில் பயணித்த பஸ்ஸும் லொறியொன்றுமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியில் முதுகடுவ பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. முதுகட்டுவ பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொண்டதன் பின்னர் பஸ் பிரதான வீதிக்கு பயணிக்க முயற்சித்தபோது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

பிரதான வீதியை நோக்கி செல்லவிருந்த பஸ் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த லொறியின்மீது மோதியுள்ளதுடன், பஸ்ஸின் சாரதியால் பஸ் வண்டியை கட்டுபடுத்த முடியாமல் போனதால் பஸ் மின் கம்பமொன்றில் மோதியுள்ளது. மின்கம்பமும் சேதமடைந்ததால் மாரவில உள்ளிட்ட பிரதேசங்களுக்கான மின் விநியோகமும் தடைப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்தில் காயங்களுக்குள்ளானவர்களுள், பஸ் சாரதியும் உள்ளடங்குவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


# வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 03ஆம் திகதி, புதன்கிழமை**

# சம்பந்தனும் தமிழர் எண்ணமும்!

இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்புடன், நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த ஆண்டு உடன்பாட்டை எட்ட எதிர்பார்க்கப்படுவதாகவும், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இது மிகவும் முக்கியமானது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் தூரமாகியிருப்பது வீண் என்று தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய நியாயமான, புதிய, போட்டித்தன்மையுள்ள மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில், ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் சில முடிவுகளை அரசுக்கு அறிவிக்கும்'' என்று அக்கட்சியின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசால் ஆரம்பிக்கப்பட்ட சர்வகட்சிப் பேச்சுவார்த்தை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பிலும், தீர்வு முயற்சிகள் மந்தகதியில் உள்ளமை குறித்தும் இரா.சம்பந்தனிடம் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்துள்ளார்.

“தற்போதைய நிலைமையில் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் மட்டுமல்ல, துப்புரவாக எதுவுமே நடைபெறவில்லை. வாக்குறுதிகள் மாத்திரமே அரசால் வழங்கப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் எதுவும் இல்லை. அதுதான் உண்மை. இந்த விடயம் சம்பந்தமாக நாம் செய்ய வேண்டியது என்ன என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். விரைவில் சில முடிவுகளை அறிவிப்போம்” என்று தெரிவித்துள்ளார் சம்பந்தன்.

தமிழர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க சொன்னாலும் அதை நம்புவதற்குத் தயாரில்லை என்பதையே சம்பந்தனின் கருத்துகள் சொல்கின்றன. ஜனாதிபதியாக ரணில் பதவியேற்ற கையோடு தமிழர் பிரச்சினை குறித்து சவடாலாக பேசியிருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர் பிரச்சினையில் தீர்வு காணப்படுமென யாழில் நடைபெற்ற தேசிய பொங்கல் தின விழாவில் கூறியிருந்த ரணில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அறிவித்திருந்தார்.

அத்துடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை கடந்த பிப்ரவரி மாதம் 8ஆம் திகதி நாட்டு மக்கள் மத்தியில் வெளியிடவுள்ளதாகவும் அறிவித்திருந்த ஜனாதிபதி, அதற்கான கட்சித் தலைவர்கள் கூட்டம் விரைவில் கூடும் எனவும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், ஜனாதிபதியால் அப்படியான அறிவிப்பு வெளியிடப்படவுமில்லை. கட்சித்தலைவர்கள் கூடவுமில்லை. இதனால்தான் அரசை தொடர்ந்து நம்புவதா, இல்லையா என்று தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் சம்பந்தன். சம்பந்தனின் அந்தக் கருத்து நியாயமானதும் வாஸ்தவமானதும் கூட.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தனது தனிப்பட்ட ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் அடிக்கடி கூறுவதாகவே தெரிகிறது. ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்தும் அல்லது அவற்றுக்கு செயலுருவம் கொடுக்கும் அரசியல் அதிகாரம் அவரிடம் இல்லையென்பதால்தான் அவரின் அறிவிப்புக்கள் வெறுமனே ‘ஏட்டுச்சுரைக்காயாக’ இருக்கின்றன. இனிவரும் ரணிலின் அறிவிப்புகளும் அப்படித்தான் இருக்கப்போகின்றன என்பதால் சம்பந்தன் அரசியல் ரீதியாக தீர்மானமொன்றை எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயம். தமிழர் எண்ணமும் அதுவே.

# மாகாணசபைத் தேர்தல்கள் மூலமாக மக்களின் மனநிலையை அறிதல்!




எரிபொருட்களின் விலைகளில் இரண்டாவது சுற்றுக் குறைப்பு (சாதாரண பெற்றோலுக்கு 2 சதவீதம், ஆடம்பர வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் சூப்பர் டீசலுக்கு 29 சதவீதம்) சனத்தொகையில் வசதிபடைத்த பிரிவினர் மத்தியில் அதன் ஆதரவுத்தளத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் நாட்டம் கொண்டிருப்பதன் ஒரு அறிகுறியே. வசதி படைத்த பிரிவினர் அபிப்பிராயத்தை உருவாக்குவதில் முக்கியமானவர்கள் என்ற நம்பிக்கையில், தேர்தல்களை நடத்தும் எதிர்பார்ப்பில், மக்கள் மத்தியில் மனநிலை மாற்றத்தை தோற்றுவிப்பது இதன் நோக்கமாக இருக்கக்கூடும்.

காலம் கடந்துவிட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. 300க்கும் அதிகமான சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணங்கள் மாத்திரமல்ல, பாடசாலைச் சிறார்களின் பாடப்புத்தகங்களின் விலைகளில் 200க்கும் அதிகமான சதவீதத்தினால் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு போன்ற பெருமளவு விலை அதிகரிப்புகளினால் உள்ளூர் மட்டத்தில் மக்கள் பெரிதும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும். ஆனால், தேர்தல்கள் ஊடாக மக்களின் ஆணையைப் பெறுவது நியாயப்பாட்டுக்கான ஓர் ஆதாரமாகும். அரசாங்கம் அதன் இருப்பை நியாயப்படுத்துவதையும் மக்களின் சார்பில் தீர்மானங்களை எடுப்பதையும் அது இயலுமாக்கும்.

தற்போதைய காலகட்டத்தில் குறிப்பாக, வங்குரோத்துநிலை பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னரான சூழ்நிலையில், உலகுடன் வழமையான வாணிப உறவுகளை மீள ஏற்படுத்திக் கொள்வதற்காக கடினமானதும் சர்ச்சைக்குரியதுமான பல தீர்மானங்களை எடுக்கவேண்டியிருக்கிறது. அரசாங்கம் அதன் வெளிநாட்டுக்கடன்களை திருப்பிச் செலுத்துவதை கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நிறுத்திக்கொண்டது. கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு அரசாங்கத்திடம் சர்வதேச நாணயக் கையிருப்பு இருக்கவில்லை.

வங்குரோத்துநிலையைப் பிரகடனம் செய்த நாடொன்று கடன்களை திருப்பிச் செலுத்துவதை தாமதிப்பதற்கும் அந்த கடன் பணத்தில் கழிவொன்றை (Haircut) பெறுவதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதே சர்வதேச நடைமுறையாகும். இந்த கடன் வழங்குனர்களுடனான மீட்சி செயன்முறைக்கு சர்வதேச நாணய நிதியம் ஆதரவளித்து வருகிறது. அதேபோன்றே அரசாங்கத்தின் பிணைமுறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் வைத்திருக்கும் உள்நாட்டுக்கடன் வழங்குநர்கள், உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிறுவனங்களுடனும் கடன் மறுசீரமைப்புக்கு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியிருக்கிறது. இந்த உள்நாட்டுக் கடன் வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்கள் சில தொழிலாளர்களின் சேமிப்புகளை வைத்திருக்கின்றன. இந்த சேமிப்புகளை தவிர தொழிலாளர்களுக்கு அவர்களது ஓய்வுகாலத்தில் பணத்தக்கான வேறு ஆதாரம் எதுவும் இல்லை.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை அரசாங்கம் தற்காலிகமாக ஒத்திவைத்திருக்கிறது. அடிப்படை வருமானத்தில் இழப்புக்கு மேலதிகமாக சேமிப்புகளிலும் இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலையில், தொழிலாளர் வர்க்கத்தின் வேலைநிறுத்தங்களும் மக்கள் போராட்டங்களும் முழுவீச்சில் முன்னெடுக்கப்படக்கூடும் என்று அரசாங்கத்துக்கு இருக்கும் அச்சத்துடன் தொடர்புபட்டதாக இந்த ஒத்திவைப்பு இருக்கக்கூடும்.

பெரிய தனவந்த சர்வதேச கடன் வழங்குனர்களிடம் கழிவைப் பெறுவதைப் போன்று அரசாங்கம் உழைக்கும் மக்களின் சேமிப்புகளையும் கழிவுக்கு உட்படுத்தினால் அவர்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் இறங்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் பயங்கரவாத செயல்கள் என்று வியாக்கியானப் படுத்தக்கூடியதாக விசாலமான வீச்செல்லையைக் கொண்டதாக இருக்கிறது. அதற்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளை மறுபரிசீலனை செய்யவேண்டிவரும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கிறது. தற்போதைய நெருக்கடியான தருணத்தில் அந்த வரிச்சலுகையை இழந்தால் இலங்கைக்கு பெரிய பாதிப்பு ஏற்படும்.

### இரு தெரிவுகள்

தேர்தல்களை நடத்துவதைப் பொறுத்தவரை, அரசாங்கம் அதிகாரத்தின் மீதான அதன் பிடிக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் ஓரளவு நியாயப்பாட்டைப் பெறுவதற்கு வகைசெய்யக்கூடிய இரு தெரிவுகள் அதற்கு இருக்கின்றன. பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடுவதற்கான சட்ட அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஆனால், ஆளும் கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெறாவிட்டால் அரசாங்கம் அதிகாரத்தை இழக்கும். அத்துடன், பாராளுமன்றத்தில் புதிய பெரும்பான்மைக் கட்சி ஜனாதிபதிக்கு விரோதமானதாக இருக்கும் பட்சத்தில் ஜனாதிபதியும் தனது அதிகாரத்தை இழக்கவேண்டியேற்படும்.

மறுபுறத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையோ அல்லது மாகாணசபைத் தேர்தர்களையோ நடத்துவது அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமையப்போவதில்லை. இந்த இரு தேர்தல்களும் நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருக்கின்றன. பணம் இல்லை என்பதே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் கூறும் சாக்குப்போக்காகும். எரிபொருட்களின் விலைகளில் அரசாங்கம் செய்யும் குறைப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இது நம்பமுடியாதது.

“அரசாங்கம் எந்த வடிவிலானதாக இருக்கவேண்டும் என்று முட்டாள்கள் வேண்டுமானால் சண்டை பிடிக்கட்டும். எது சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறதோ அதுவே சிறந்த அரசாங்க வடிவம்'' என்ற 18ஆம் நூற்றாண்டின் ஆங்கில அரசியல் விமர்சகர் அலெக்சாண்டர் போப்பின் வார்த்தைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசாங்கம் மனதிற்கு எடுத்திருக்கிறது போன்று தெரிகிறது. நாட்டை வழிநடத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது வழங்குகின்ற தலைமைத்துவம் அவரின் அரசியல் எதிரிகள் உட்பட சமூகத்தில் பலரால் நேர்மறையாக நோக்கப்படுகிறது. ஜனாதிபதி தான் எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு மத்தியில் உத்வேகமாக மேம்படுகிறார் போன்று தெரிகிறது.

ஒரு வருடத்துக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறியபோது காணப்பட்ட குழப்பகரமான நிலைமையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு, பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட உடனடியாகவே ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பங்களிப்புக்கு ஓர் அங்கீகாரம் இருக்கிறது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணமான அதே அரசாங்க நிர்வாக ஒழுங்கே மீண்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும், அமைதியான சூழல் நிலவுகிறது என்ற ஓர் உணர்வு தற்போது காணப்படுகிறது. உயர்மட்ட ஊழலுக்காக குற்றஞ்சாட்டப்பட்டு பொறுப்புக்கூறாமல் இருக்கும் ஆட்களே வாக்குவங்கிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் நடைமுறைச்சாத்தியமான முறையில் அரசாங்க நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு சமாளித்து நடக்கவேண்டியிருந்தாலும் கூட அவர்கள் அரசாங்கத்தில் தொடர்வது தார்மீக அடிப்படையில் அனுமதிக்கக்கூடியதல்ல.

ஜனாதிபதியின் மதிப்பு உயர்வானதாக காணப்படும் தற்போதைய தருணமே தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்கு சிறந்த வாய்ப்பு என்று அவரும் அவரின் ஆலோசகர்கள் குழுவும் நம்புவதாக செய்திகள் வருகின்றன. ஆனால், உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பு அவரை அனுமதிக்கவில்லை. மக்களினால் தெரிவுசெய்யப்படும் ஒரு ஜனாதிபதி மாத்திரமே முன்கூட்டியே தேர்தலை நடத்தமுடியும் என்று அரசியலமைப்பு கூறுகிறது.

பதவி விலகும் ஜனாதிபதியின் இடத்துக்கு பாராளுமன்றத்தினால் தெரிவாகும் ஜனாதிபதியொருவர் முன்னையவரின் எஞ்சிய பதவிக்காலத்தை நிறைவு செய்யவேண்டும். ரணில் விக்கிரமசிங்க முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்த விரும்பினால் அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவரவேண்டும். அதற்கு அவருக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை தான் விரும்புகிற ஒரு நேரத்தில் ஜனாதிபதி நடத்துவதை எதிர்க்கட்சிகள் விரும்புமா என்பது ஒரு கேள்வி.

### மாகாணசபைத் தேர்தல்கள்

இத்தகைய சூழ்நிலைகளில், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் யோசிப்பது போன்று தெரிகிறது. மாகாணசபைத் தேர்தல்கள் நான்கு வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்றன. மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பான சட்டம் ஒன்று காரணமாகவே அவை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அந்த சட்டத்தை மீளாய்வு செய்யும் செயன்முறைக்கு அரசியல் கட்சிகள் மத்தியில் கருத்தொருமிப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

ஆனால், சட்டத்தை மாற்றவேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால் அதைச் செய்வதற்கு அதனிடம் பாராளுமன்ற பெரும்பான்மை பலம் இருக்கிறது. மாகாணசபைத் தேர்தல்களின் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் காரணமாக அவற்றை நடத்துவதை எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பது சாத்தியமில்லை.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இனநெருக்கடிக்கு ஒரு தீர்வாக 1987ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டவையே மாகாணசபைகள். இந்தியாவை ஐக்கியப்பட்டதும் பெருமளவுக்கு அமைதியானதாகவும் வைத்திருப்பதில் வெற்றிகண்ட அதிகாரப் பரவலாக்கப்பட்ட இந்திய அரசாங்க முறைமையை (Indian System of Devolved Government) மாதிரியாகக் கொண்டு அமைந்ததே மாகாணசபை முறைமை. ஆனால், இலங்கையில் போர் என்ற கண்ணாடி வில்லையின் ஊடாகவே அந்த முறைமை நோக்கப்படுகிறது. போரை முடிவுக்கு கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது போர் தொடர்ந்துகொண்டிருந்தது.

அதன் விளைவாக மாகாணசபைகளுக்கு போதிய நிதி வளங்களோ அதிகாரங்களோ கொடுக்கப்படாமல் அது ஒரு கேலிக்குள்ளாக்கப்பட்டது. நான்கு வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்தாமல் அவற்றை ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நிர்வாகத்தில் வைத்திருப்பது மிகவும் மோசமான அவமதிப்பாகும். இந்த ஆளுநர்களில் சிலர், மக்களுடன் எந்த நெருக்கமும் இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இந்த நேரத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது நாட்டில் ஜனநாயக மற்றும் நல்லிணக்க செயன்முறைகளை பலப்படுத்துவதற்கு ஒரு நேர்மறையான தொடக்கமாக அமையமுடியும். நாட்டின் ஆட்சிமுறையில் தங்களுக்கு பயனுறுதியுடைய முறையில் பங்கு இல்லை என்று விளங்கிக்கொண்ட தமிழ் மக்கள் தாங்கள் அந்நியப்படுத்தப்படுவதாக உணர்ந்த காரணத்தாலேயே இனநெருக்கடி மூன்று தசாப்த காலம் நீடித்த போராக மாறியது.

தேர்தல் அரசியலைப் பொறுத்தவரை தனது தேசியவாதமற்றதும் இனவெறியற்றதுமான அணுகுமுறைகளுக்காக ரணில் விக்கிரமசிங்க பெரிதும் மதிக்கப்பட்டு வந்திருக்கிறார். நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த வருடத்தில் இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இறுதியாக அவர் அறிவித்திருக்கிறார். மாகாணசபை முறையை மீண்டும் செயற்படவைப்பது, நல்லிணக்கத்துக்கான ஒரு செய்தியாகவும் முன்னெடுக்கின்ற பாதை குறித்து அரசாங்கம் மக்களுடன் கலந்தாலோசிக்கத் தயாராயிருப்பதன் அறிகுறியாகவும் அமைய முடியும். போர்க்காலக் குற்றங்களுக்காகவும் தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்காகவும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக்கூறவைக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள். அது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டிய தேவை இருக்கிறது.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

## இன்றைய நாளில்...

- 1879 – யாழ். கரவெட்டியில் வெல்லனிற் பிள்ளையார் கோயில் திருவிழாவின்போது இடம்பெற்ற தீ விபத்தில் 50 பேர் வரையில் கருகி உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். இதன்போது கோயில் முழுமையாக எரிந்துபோனமை குறிப்பிடத்தக்கது.
- 1913 – இந்தியாவின் முதல் முழு நீளத் திரைப்படமான ராஜா ஹரிஸ்சந்திரா வெளியானது.
- 1939 – சுபாஷ் சந்திரபோஸ் அனைத்திந் திய போர்வார்ட் பிளொக் கட்சியை ஆரம்பித்தார்.
- 1941 – பி.பி.சி. தமிழோசை வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 1986 – கொழும்பு விமான நிலையத் தில் எயர்லங்கா 512 பயணிகள் விமானத்தில் குண்டு வெடித்ததில் 21 பேர் கொல்லப்பட்டதுடன், 41 பேர் காயமடைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

தொழிலாளரைப் பத்திப் பேச இனி அடுத்த மே தினம் வரைக்கும் காத்திருக்கோணும் என்னங்கோ..!





## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நட்டஈட்டு விவகாரம்:

# குற்றஞ்சாட்டப்பட்டவர் குறித்து நந்தலால் தெளிவுபடுத்த வேண்டும்

### விசாரணைக்காக பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவை நியமிக்குமாறும் ஜீ.எல். வலியுறுத்து

இலங்கை கடற்பரப்பில் தீப்பரவலுக்குள்ளான எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நட்டஈட்டு விவகாரத்தில் இலஞ்சம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் நபர் தொடர்பில் எந்தவொரு தகவலையும் வெளியிடாமல் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அமைதிகாப்பது தவறான விடயமாகும். எனவே அவர் இதுதொடர்பில் முறையான தெளிவுபடுத்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க பாராளுமன்ற விசேட செயற்குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் எமக்குக்கிடைக்க வேண்டிய நட்டஈடு நாட்டின் அந்நிய செலாவணியில் தலா 6.4 பில்லியன் டொலராகும் என்பது நிபுணர்களின் கணிப்பாகும். அவ்வாறெனில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் நிதியுதவியிலிருந்து இரண்டு மடங்கு அதிகமாகும். இது இலங்கைக்கு முழுமையாக சொந்தமான நிதியாகும். இது கடன் நிதி இல்லை.

சாமர குணசேகர என்பவரின் பிரித்தானிய வங்கி கணக்கொன்றில் 250 மில்லியன் டொலர் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த நபர் யார், அவரின் அடையாளங்களை தேடிப்பார்க்க வேண்டியது அவசியமாகும். இவர் உண்மையாக இருக்கும் நபரொருவரா அல்லது அவ்வாறான நபர் இருக்கிறா என்பது குறித்து தேடிப்பார்க்க வேண்டும்.

இதுவொரு பாரதூரமான குற்றச்சாட்டாகும். இதுதொடர்பில், மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவே உண்மையான தகவலை தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறானதொரு சம்பவம் நாட்டில் இடம்பெற்றிருக்குமா என்பதை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். அவ்வாறானதொரு சம்பவமொன்று இடம்பெற்றிருக்காவிட்டால் பல்வேறு கோணங்களில் பிரச்சினைகள் உருவாகும்.

நாட்டில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படு போது மத்திய வங்கியின் ஆளுநர் அமைதியாக இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு அவர் விளக்கமளிக்கா விட்டால் மக்களின் கவனம் வேறு திசைக்கு திரும்பும் வாய்ப்புள்ளது.

இலங்கையின் கடற்பரப்பிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது இலங்கை சட்டத்துக்கு உட்பட்ட விடயமாகும். சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தாலும், அந்த நீதிமன்றத்திலும் இலங்கை சட்டத்திட்டங்களின் அடிப்படையிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படும். அவ்வாறெனில் இலங்கையில் தொடர்ந்து வழக்கு விசாரணைகளை முன்னெடுக்காமல் எதற்கு சிங்கப்பூர் அரசாங்கத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள்.

எனவே, இதுதொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட செயற்குழுவொன்றை நியமிக்க வேண்டும். அதனை விரைவாக முன்னெடுக்க வேண்டும். இப் பிரச்சினையை மூடிமறைக்க முடியாது என்றார்.

# மீன் உணவுகள் - குளங்களுக்கு பயன்படும் உபகரணங்களின் விலை குறைக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டும் வழிகளில் அலங்கார மீன் தொழிற்றுறை மற்றும் நீர்த் தாவர தொழிற்றுறை முதன்மையானதாக கருதப்படுவதோடு இந்தத் தொழிற்றுறையில் ஈடுபாடு காட்டுகின்ற பண்ணையாளர்களை அதிகரிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை தற்போது திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. மீன் உணவுகள் மற்றும் குளங்களுக்கு பயன்படுத்துகின்ற உபகரணங்களின் விலையை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாதுக்கை, ஹோமாகம பிரதேசங்களுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது, பாதுக்கை பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தார். அதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர், மேலும் தெரிவிக்கையில்,

பிரதமரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இப் பகுதி மக்களிடம் இருக்கின்ற சிக்கல்களை அவர் நன்றாக புரிந்து வைத்துள்ளார். பிரதமரின் ஆலோசனைக்கமைய பண்ணைகளை பரீரிட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மீன் உணவுகள் மற்றும் குளங்களுக்கு பயன்படுத்துகின்ற உபகரணங்களின் விலையை குறைப்பதற்கு பிரதமருடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுக்க பிரதேசத்தில் தனியார் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் நீர்வாழ் தாவரங்கள் வளர்ப்பு போன்ற தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அவர்களுக்கான தேவைகள் தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்றார். இங்கிருந்து வழங்கப்படுகின்ற மீன் உணவுகளின் விலை அதிகமாக இருப்பதும் குளங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களின் விலை அதிகரிப்பதன் அடிப்படையிலும் இத் தொழிலை தொடர்வதில் அதிகம் சிரமம் இருப்பதாக அலங்கார மீன்கள் மற்றும் நீர் தாவர தொழிற்றுறையாளர்கள், அமைச்சருக்கு சுட்டிக்காட்டினார்கள். அதனால் அதற்காக அரசு தலையிட்டு ஏதேனும் நிவாரணம் ஒன்றை வழங்குவதாயின் நாட்டுக்கு எடுத்துவரப்படுகின்ற அந்நியச் செலாவணியை மேலும் அதிகரிக்க முடியும் என்பதோடு இந்தப் பகுதியில் உள்ள அதிகமானவர்களின் தொழில் பிரச்சினைக்கும் சாதகமான தீர்வொன்றை பெற்றுத்தர முடியும் என்றும் கூறப்பட்டது.

தற்போது தனியார்கள் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு அமைச்சு உதவுவது மட்டுமல்லாமல் புதிய முயற்சியாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் இந்து ரத்னாயக்க, நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், பிரதமரின் இணைப்புச் செயலாளர் உட்பட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நபரொருவர் சடலமாக மீட்பு

வட்டக்கச்சி, மாவவனூர் பகுதி வாய்க்காலிலிருந்து நேற்று ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி, மாவடி பகுதியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மஹவல பகுதியில் பஸ் விபத்து







மிரிஸ்வத்த – வதுருகம வீதி இந்தருகல்ல, மஹவல வடிகாலமைப்பு பகுதிக்கு அருகில் பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகிநேற்று (02) விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹங்வெல்லையிலிருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த அங்கொடைடிபோவுக்கு சொந்தமானபஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவத்தில் சில பயணிகள் சிறு காயங்களுக் குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கிரிந்திவல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



இலங்கை வந்துள்ள இந்திய விமானப்படை தளபதி ஏயார் சீஃப் மார்ஷல் விவேக் ராம் சௌதாரி, விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை நேற்று (02) சந்தித்தார்.

# வாகன விபத்தில் ஒருவர் மரணம்



(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை வீதி எருவன் பகுதியில் நேற்று (02) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்திலிருந்து சென்ற வேனும், பருத்தித்துறையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற அல்வாய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்தியானந் என்ற இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நைஜீரியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டு இலங்கையர்கள் விடுவிப்பு



நைஜீரியா மற்றும் ஈக்குவாடோரியல் கினியாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் எண்ணெய்க் கடத்தல் சம்பவமொன்று தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த , எட்டு இலங்கையர்களுடன் எம்.டி. ஹெரிக் ஹிடன் கப்பலை விடுவிக்குமாறு நைஜீரியா, போர்ட் ஹார்கோர்ட்டிலுள்ள பெடரல் உயர் நீதிமன்றத்தினால் கடந்த 28ஆம் திகதி உத்தரவிடப்பட்டுள்ளது.

நைஜீரிய அதிகாரிகளுக்கும் கப்பல் உரிமையாளரான இடன் மெரிடைம் லிமிடெட் நிறுவனத்துக்கும் இடையில் ஏற்பட்ட பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இவர்களை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

08 இலங்கையர்களுடனாக 26 பணியாளர்களுடன் இந்த கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த கப்பலின் உரிமையாளர்களால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அவர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என நைஜீரியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

# மனைவிக்கு இன்சுலின் ஊசி செலுத்தி ஏன் கொல்ல முயன்றேன்?

### கைதான வைத்தியர் வெளியிட்ட அதிர்ச்சி தகவல்

திருமணமாகி 5 வருடங்களாகியும் குழந்தைப் பேறு இன்மையால் மன உளைச்சலுக்குட்பட்டிருந்த இருவரும் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தோம்.இந்நிலையிலேயே மனைவிக்கு இன்சுலின் ஊசி ஏற்றி கொலை செய்ய முயன்றதாக கைது செய்யப்பட்ட மருத்துவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இளம் மனைவிக்கு இன்சுலின் ஊசியை பலவந்தமாக செலுத்தி கொலை செய்ய முயன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் திருகோணமலை வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸார் கடந்த 30 ஆம் திகதி கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். இந்நிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான வைத்தியர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் மகப்பேறு மற்றும் பெண் நோயியல் வைத்தியராக கடமையாற்றுவதாக தெரியவந்துள்ளது. இதேவேளை சந்தேக நபரான வைத்தியர் தற்கொலைக்கு முயற்சி செய்யவில்லை என ஆதாரங்களின் அடிப்படையில் தெரியவந்துள்ளதாகவும் வைத்தியர் மனைவியை கொல்ல முயன்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

24 வயதான குறித்த வைத்தியரின் மனைவி தற்போது களுபோவில பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரிடமிருந்து இதுவரை வாக்குமூலம் பெறமுடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான 33 வயதுடைய வைத்தியரும் அவரது மனைவியும் காத்தான்குடியில் வசிப்பவர்கள் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மனைவியின் தந்தை காத்தான்குடியைச் சேர்ந்தவர். அவர் பிரபல தொழிலதிபராவார்.இந்நிலையில் குறித்த திருமணம் நிச்சயிக்கப்பட்டதொன்றாகும். இதேவேளை வைத்தியரின் தந்தை இறந்துவிட்டதாகவும் அவருக்கு இரண்டு சகோதரர்கள் இருப்பதாகவும் இவர் தனது தாயாருடன் காத்தான்குடியில் வசித்து வந்ததாகவும் சம்பவத்தின் போது பம்பலப்பிட்டி லேயார்ட்ஸ் வீதியிலுள்ள வீடொன்றில் வைத்தியரும் அவரது மனைவியும் தங்கியிருந்ததாகவும் இந்த வீட்டை வைத்தியரின் மனைவியின் தந்தை திருமணத்துக்குப் பிறகு வாங்கி பரிசளித்ததாகவும் வைத்தியர் தனது மனைவி சுகயீனமடைந்திருப்பதாகக் கூறி கடந்த 25ஆம் திகதி காலை களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அப்போது அவர் கோமா நிலையில் இருந்ததாகவும் வைத்தியர் தனது மனைவியின் தம்பியுடன் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் மனைவியின் சகோதரர் தனது சகோதரியின் நிலை குறித்து சந்தேகம் கொண்டதாகவும் அவரது அறையை சோதனை செய்யுமாறும் அவர் பொலிஸாரிடம் கூறியதாகவும் அங்கு அவரது பையில் ஊசி மருந்து இருப்பதை பொலிஸார் கண்டறிந்ததாகவும் விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், இருவரும் தற்கொலை செய்ய திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் காலையில் மனைவியின் நிலையைக் கண்டு பயந்து அவளை மருத்துவமனையில் அனுமதித்ததாகவும் வைத்தியர் தனது மாமனாரிடம் கூறியுள்ளார்.இதுகுறித்து வைத்தியரின் மாமனார் பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் ஒருவர் உயிரிழப்பு

நாட்டில் கடந்த 30 ஆம் திகதி கொரோனா மரணமொன்று பதிவாகியுள்ளதாகவும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று முன்தினம் (01) அறிவித்துள்ளார்.

அதற்கமைய, நேற்று முன்தினம் நாட்டில் 06 கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரையில் 6 இலட்சத்து 72 ஆயிரத்து 177 கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். எனவே பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார பிரிவு ஆலோசனை வழங்கியுள்ளது.


## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 மே மாதம் 25 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு**
**வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.05.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5103 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,266,921.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 6 8 4 0 9 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3345 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,306,546.64
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 12 15 20 71

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1558 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,445,211.60
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 5 0 4 5 6 3

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1133 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,345,361.20
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 04 52 60 78

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 412 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,640,810.80
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 13 22 26 33 — விசேட இலக்கினம் கும்பம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1451 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 318,524,234.00
ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 06 39 50 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராமன்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வவுனியா நபரை கடத்திச் சித்திரவதை: யாழில் 11 பேர் பொலிஸாரால் கைது!

(யாழ்.நிருபர்)

வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவரை கடத்தி வந்து வீடொன்றில் அடைத்து வைத்து சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 3 பெண்கள் உட்பட 11 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஹைஎஸ் ரக வான் ஒன்றும் மற்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் யகத் விஷாந்த கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தனர்.

வவுனியா பூவரசம்குளம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரை வெளிநாடு அனுப்புவதாகக் கூறி வேலணையைச் சேர்ந்த நபர்களிடம் 10 இலட்சம் ரூபா பணத்தை வாங்கியுள்ளார். எனினும், நீண்ட நாட்களாக வெளிநாடு அனுப்புவதற்கான நடவடிக்கையை அவர் எடுக்கவில்லை.

அவருக்கு பணம் கொடுத்தமைக்கு எந்தவித ஆதாரமும் இல்லாததால் ஆதாரத்தை உருவாக்குவதற்காக குறித்த நபரை கடத்தி வந்துள்ளனர்.

நேற்றுக் காலை முச்சக்கரவண்டி வாடகைக்கு வேண்டும் என்று கூறி இரண்டு இளம் பெண்கள் அவரை வரவழைத்துள்ளனர். அவர்கள் அழைத்த இடத்துக்குச் சென்றபோது முச்சக்கரவண்டியை அங்கு கைவிட்டு 10 பேர் கொண்ட கும்பல் அவரை அடித்து ஹைஎஸ் வானில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வந்துள்ளது.

கொக்குவில் தாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக உள்ள வீட்டில் அடைத்து வைத்து மிரட்டி 10 இலட்சம் தர வேண்டும் என்ற கடிதம் ஒன்றை எழுதி வாங்கியுள்ளது அந்தக் கும்பல்.

நபர் ஒருவர் கடத்தி வரப்பட்டு சித்திரவதை இடம்பெறுவதாக யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் யரூரின் கட்டளைக்கு இணங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து அந்தக் கும்பல் வானில் மன்னார் செல்ல முற்பட்டுள்ளது. கும்பல் பயணித்த வான் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸின் உதவியுடன் வழிமறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது.

தாங்கள் உறவினர் வீட்டுக்கு வந்ததாகவும் எவரையும் கடத்தி வரவில்லை என்றும் வானில் இருந்தவர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் வாகனத்தை கொண்டு சென்று கொக்குவில் தாவடி பகுதியில் உள்ள வீட்டை பொலிஸ் அதிரடிப் படையினரின் உதவியுடன் சுற்றிவளைத்தனர்.

அந்த வீட்டில் கடத்தப்பட்டவர் அடிகாயங்களுடன் காணப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய 20, 29 மற்றும் 40 வயதுடைய பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஹைஎஸ் ரக வான் ஒன்றும் 3 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சர்வதேச உழைப்பாளர் தின நிகழ்வு



(யாழ்.நிருபர்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சர்வதேச உழைப்பாளர் தின நிகழ்வு மே தினத்தன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நா.பார்த்திபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com



புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் சர்வதேச உழைப்பாளர் தின நிகழ்வுகள் மே முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. மாலை 4 மணியளவில் கல்வியங்காடு புதிய செம்மணிவீதிச் சந்தியில் இருந்து மே தினப் பேரணி ஆரம்பமாகி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நிறைவுற்று பொதுக்கூட்டம் இடம்பெற்றது. ''ரணில் அரசாங்கத்தில் விலைவாசிகள், உழைக்கும் மக்களை அரசாங்கம் சுரண்டுகிறது, விவசாயத்தினை கூண்டோடு அழிக்கிறது'' உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பேரணி இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் மாக்சிச லெனினிசக் கட்சியில் செயலாளர் சி.க.செந்திவேல், உறுப்பினர் செல்வம் கதிர்காமநாதன், சட்டத்தரணி த.தேவராஜ் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- யாழ்.நிருபர்)

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லை முனியப்பர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள பழக்கடையில் வேலை செய்து வந்த இளைஞன் பழக்கடைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பலாலியைச் சேர்ந்தவரும் தற்போது அச்சுவேலி பத்தமேனி பகுதியில் வசித்து வருபவருமான வசந்தகுமார் ஸ்ரீகாந்த் (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் காணப்படும் நிலை சந்தேகத்துக்கு இடமான முறையில் உள்ளமையால், கொலையா அல்லது தற்கொலையா என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உடற்கூற்று



பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



புதிய ஜனநாயக லெனினிசக் கட்சியின் மேதினக் கூட்டமும் ஊர்வலமும் இராகலையில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: ஆ.ரமேஸ், எஸ். கணேசன்)

# அநீதி இழைக்கப்பட்ட 400 பேருக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குக!

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென உள்வாங்கப்பட்ட 4,000 ஆசிரிய உதவியாளர்கள் உரிய பயிற்சிகளை நிறைவு செய்துகொண்டதன் பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் துரதிர்ஷ்டவசமாக அவர்களில் 400 பேர் இதுவரையில் எந்தவொரு பாடசாலையிலும் நியமன ஆசிரியர்களாக உள்வாங்கப்படவில்லை என்பது கவலைக்குரியதாகும். ஆகவே இவ்விடயத்தில் நேரடியாக தலையீடு செய்து மேற்படி பாதிக்கப்பட்டுள்ள 400 பேரையும் ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கு ஆவன செய்யுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் ஜனாதிபதியிடம் விடுத்துள்ள எழுத்துமூல கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல் மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் என மலையக பாடசாலைகளை உள்ளடக்கியவாறு 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 4000 ஆசிரிய உதவியாளர்களை இணைத்துக் கொள்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஆசிரிய உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படுவோர் குறிப்பிட்ட காலப் பகுதியில் குறித்துரைக்கப்பட்ட பயிற்சிநெறிகளை பூர்த்திசெய்து அதற்கான ஆவணங்களை சம்பந்தப்பட்ட மாகாண கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் அதன்பின்னரே நியமனங்கள் வழங்கப்படும் என்ற ரீதியிலும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இதனை ஏற்று ஆசிரிய தொழிலில் நாட்டமுடைய மலையக இளைஞர்களும் யுவதிகளும் விண்ணப்பித்து உள்வாங்கப் பட்டு பயிற்சிகளையும் நிறைவுசெய்து பின்னர் அவர்களில் பெரும் பகுதியினர் நியமனமும் வழங்கப்பட்டனர்.

எனினும் இவர்களில் சுமார் 400 பேர் உரிய பயிற்சிகளை நிறைவு செய்து கொண்டதுடன் அதற்கான ஆவணங்களை மாகாண கல்வி காரியாலயங்களிலும் சமர்ப்பித்துள்ளனர்.

இருந்தபோதிலும் நாட்டில் ஏற்பட்டிருந்த கொவிட் 19 தொற்று, அதன்பின்னர் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி காரணமாக மேற்படி 400 பேருக்கும் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும் 2015இன் பின்னர் தொடர்ச்சியாக ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுவருவதால் தங்களை நிரந்தர நியமன ஆசிரியர்கள் பட்டியலுக்குள் இணைத்துக்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



மேற்படி 400 பேரும் 4000 ரூபா கொடுப்பனவையே பெற்றுவந்த நிலையில் எனது தலையீட்டின் காரணமாக அது 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. நீண்டகாலமாக வழங்கப்பட்டு வரும் அந்த தொகையில் இதுவரை எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, வாழ்வாதாரப் பிரச்சினை ஆகியவற்றுக்கு மத்தியில் வழங்கப்படுகின்ற 10,000 ரூபா என்ற கொடுப்பனவு போதுமானதாக இல்லை. ஆகவே பாதிக்கப்பட்ட 400 பேரையும் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஆலோசனைகளை வழங்குமாறும் மிகத் தயவாக கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பொகவந்தலாவையில் குளவிக்கொட்டு

# 04 மாணவர்கள் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா செய்தியாளர்)

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவில் உள்ள எலிப்படை தமிழ் வித்தியாலய மாணவர்கள் நான்கு பேர் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்கானோரில் மூன்று மாணவியர் அடங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் எலிப்படை தமிழ் வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நானுஓயா கிளாரண்டன் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளாரண்டன் கலாசார மண்டபத்தில் Hope For Children என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையில் பிலிவர்ஸ் ஈஸ்டன் கிறிஸ்தவ ஆலயத்துக்கு பொறுப்பான அருட்தந்தை மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: செ.திவாகரன்)

# நான்காயிரம் விண்ணப்பதாரர்களுக்கு மாத்தளையில் குடிநீர் வழங்கப்படவில்லை

(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

மாத்தளை நீர் விநியோக குடிநீர்த்திட் டத்தின் கீழ் குடிநீரை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியாமல் பாரிய கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை, பல்லேபொல, யட்டவத்த, உக்குவெல, அம்பங்கங்க கோரள ஆகிய பிரதேச பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 4,000 இற்கும் 5,000 இற்கும் இடைப்பட்ட விண்ணப்பதாரிகள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக நீர் விநியோகத் திட்டத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாத்தளை மாவட்ட பொறியியலாளர் பியுமால் ஜயசிங்க கருத்து தெரிவிக்கையில், இந்த குடிநீர்த்திட்டத்தின் கீழ் குடிநீரைப் பெற்றுக்கொள்ள பலர் விண்ணப்பித்துள்ளபோதும் கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று காரணமாகவும் அதன் பின்னரான பொருளாதாரப் பிரச்சினை காரணமாகவும் தாமதமானதாக தெரிவித்தார்.

மேலும், விண்ணப்பதாரிகளுக்கு குடிநீரை பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தொழிலாளர்களுடைய ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை நிதி குறித்த ஜனாதிபதியின் உத்தரவாதத்தை வரவேற்கின்றோம்

## பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன்





(நுவரெலியா செய்தியாளர்)

தொழிலாளர்களுடைய ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுத்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி வழங்கியுள்ளதை நாம் வரவேற்கின்ற அதேவேளை அதனை உண்மையிலேயே நடைமுறைப்படுத்தவும் ஜனாதிபதி முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக் கிறோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையகம் 200 எனும் தொனிப் பொருளை மையப்படுத்தி மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகளில் முதலாவது நிகழ்வு ஹட்டன் மலையக மக்கள் முன்னணியின் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.இதன்போது மலையக இளைஞர் யுவதிகளுக்கான வலுவூட்டல் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி செயற்றிட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.நிகழ்வில் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பேச்சாளரும் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான உமாசந்திர பிரகாஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா அமைப்பாளர் தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இதற்கான ஏற்பாடுகளை மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் செய்திருந்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடந்த காலங்களில் மலையக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியையும் ஊழியர் நம்பிக்கை நிதியையும் யானை விழுங்கிவிட்ட தாக பொய்யான பிரசாரங்களை ஒரு சிலர் தேர்தல் பிரசார மேடைகளில் பேசிவந்தார்கள்.எனவே இன்று அக்கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக இருப்பதன் காரணமாக மலையக மக்களுக்கு உண்மையிலேயே இதனை யானை தின்றுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே மலையக மக்கள் தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதற்கான ஆர்வத்தை காட்டவில்லை. இந்நிலையில் தொழிலாளர்களுடைய ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுத்தப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை மேதின செய்தியில் ஜனாதிபதி வழங்கியுள்ளதை நாம் வரவேற்கின்ற அதே வேளை அதனை உண்மையிலேயே நடைமுறைபடுத்தவும் ஜனாதிபதி முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கின்றோம்.ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கினாலும் எந்தளவுக்கு மொட்டு கட்சியின் அழுத்தத்துக்கு மத்தியில் இதனை நடைமுறைப்படுத்துவார் என்ற கேள்வி எழுகின்றது.எனவே இந்த முடிவை எந்த தடைவந்தாலும் ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதனை நடைமுறைப்படுத்துகின்ற பொழுது ஏதேனும் தடங்கல் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அதனை வெற்றி கொள்வதற்கு பாராளுமன்றத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையான ஆதரவை வழங்கும்.இது எங்களுடைய மக்களின் நலன்சார்ந்து எடுக்கப்படுகின்ற ஒரு தீர்மானம்.இந்த தீர்மானத்தில் அரசியல் பின்னணி எதுவும் இல்லை என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# ஹிஸ்பு மஜ்லிஸில் பங்கேற்ற மாணவர்களுக்கு கௌரவம்






(பீ.எம்.முக்தார்)

பேருவளை, சீனன்கோட்டை, பெருகமலை ஸாக்கிரீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் புனித ரமழான் மாதத்தில் இடம்பெற்ற ஹிஸ்பு மஜ்லிஸில் பங்கு பற்றிய ஆண் சிறார்கள் , வீடுகளில் ரமழான் மாதம் குர்ஆனை ஓதி தமாம் செய்த பெண் சிறார்கள் ஆகியோரை கௌரவித்து பரிசு வழங்கும் நிகழ்வு பள்ளிவாசலில் இடம் பெற்றது.

பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எஸ்.எச்.எம். இம்ரான் (ஹுமைதி) தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் மேற்படி பள்ளி வாசல் நிர்வாக சபைத் தலைவர் அ. அர்ஷத் ஸவாஹிர் , செயலாளர் அஷ்ஷெய்க் மக்கி மன்சூர் (நளீமி), பொருளாளர் அஹ்ஸன் பௌஸி, இரத்தினக் கல் வர்த்தகர்களான பெரோஸ் , அக்ரம், பாரூக், ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா மேற்பார்வை குழுத் தலைவர் பீ.எம். முக்தார், உறுப்பினர்களான ஸயான் முனீர், இஷாக், இர்பாத் நிஸாம் ,சுபியான் பாரூக், இபாம் ஹலீல்,மொஹம்மத் பஹ்மி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான சிறார்கள் பங்குபற்றினர்.மாணவர்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவுகள் என்ற அடிப்படையில் குர்ஆன் மஜ்லிஸுகள் இடம் பெற்றன.மௌலவி எஸ்.எச்.எம். இம்ரான் (ஹுமைதி), மௌலவி எம்.என்.எம். லியாஉல் ஹக் (பாரி) ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இம் மஜ்லிஸ் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 04 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்




(நெல்லியடி செய்தியாளர்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் நான்கு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி - பொன்நகர் மத்தி கிராமத்தைச் சேர்ந்த இ. செபஸ்ரியான் பீற்றர், கயேந்திரன் நாகராணி, கந்தசாமி உதயகுமார் மற்றும் முல்லைத்தீவு, உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டைச் சேர்ந்த அழகு சர்மிளா ஆகியோர்களுக்கே இதன்போது துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.இச்செயற்றிட்ட உதவிகளை கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார்.






**அரநாயக்க, திப்பிட்டிய மஜ்மஉல் ஹைராத் அஹதிய்யா பாடசாலை நிர்வாகத்தினர் நடத்திய நோன்புப் பெருநாள் விளையாட்டுப் போட்டி அதிபர் மௌலவி எம். எச். எம்.நிஸாம் (அன்வாரி) தலைமையில் திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வில்பொல ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் பர்ஹான் உமர் உட்படநிர்வாக அங்கத்தவர்கள், மாணவர் களின் பெற்றோர், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர்.**

**(பாரா தாஹீர் மாவனல்லை)**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (02.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 206.9287 | 219.4779 |
| கனேடியன் டொலர் | 230.0864 | 243.9783 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.5892 | 48.1272 |
| யூரோ | 343.8195 | 362.4796 |
| ஜப்பான் யென் | 2.2752 | 2.4023 |
| சிங்கப்பூர் டொலர் | 234.0035 | 247.1423 |
| ஸ்ரேலிங் பவுன் | 391.6489 | 411.9100 |
| சுவிஸ் பிராங்க் | 348.1242 | 369.7851 |
| ஐ.அ. டொலர் | 313.7362 | 328.4158 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852.5439 |
| குவைட் | குவைட் தினார் | 1.049.1853 |
| ஓமான் | ஓமான் றியால் | 834.9713 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.1621 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.7056 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.5295 |

# முஸ்லிம்களின் தேசிய சமூக விவகார மேம்பாட்டுக்கு புத்திஜீவிகளின் பங்களிப்பு அவசியம்

## அமைச்சர் அலி சப்ரி






(இக்பால் அலி)

முஸ்லிம்களுடைய தேசிய சமூக விவகாரங் களில் புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் கலந்து கொண்டு சமூக மேம்பாட்டுக்காக பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஆர்.பி.எஸ்.எல். கொன்சோட்டியம்அமைப்பின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அமைப்பின் தலைவரும் முன்னாள் வக்பு சபையின் தலைவரு மான சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது உப தலைவர் வஸீர் முக்தார் தலைமையில் "முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் கவியரங்கும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், பைஸர் முஸ்தபா, முன்னாள் தூதுவரும் முன்னாள் கொழும்பு மாநகர முதல்வருமான உமர் காமில் , தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, முன்னாள் நீதிபதி ஜனாதிபதி சட்டத்தரணி சலீம் மர்சூப் ஆகியோர் பங்கேற்றனர்.

சிறப்பு மார்க்கச் சொற்பொழிவை பேருவளை ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அகார் முஹமத் நிகழ்த்தினார்.

இதன்போது பாக்கிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், முன்னாள் தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம். எம். எம். நாஜிம், பேராசிரியர் நௌபல், தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீன், முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட், எம். ரிஸ்மி, முன்னாள் கண்டி மாநகர உப தவிசாளர் இலாஹி ஆப்தீன், உப தலைவர் சைபுதீன் ஹனீபா, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சாமிலா தாவூத், இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் பொறியியலாளர் எம். எம். எம். முனவ்வரா, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியல் துறை முது நிலை விரிவுரையாளர் எம். எஸ். எம். ராசிக், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி தாசிம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆர். பி. எஸ். எல். கொன் சோட்டியம் அமைப்பின் இணையத்தளத்தை ஓய்வு பெற்ற நீதிபதியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சலீம் மர்சூப் தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பாயிஸ் முஸ்தபா ஆகியோர் இணைந்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

# திருகோணமலை பிராந்திய ஊடகர்களுக்கு செயலமர்வு



(கிண்ணியா, கந்தளாய் செய்தியாளர்கள்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பிராந்திய ஊடகவியலாளர் களுக்கான செயலமர்வு திங்கட்கிழமை(01) உப்புவெளி ஜேகப் பார்க் ஹோட்டலில் இடம் பெற்றது.

குறித்த செயலமர்வானது, மூலோபாய கற்கைக ளுக்கான திருகோணமலை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

'இலங்கையின் வெளிவிவகார கொள்கையை விளங்கிக் கொள்ளுதல்' எனும் தலைப்பில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், வளவாளராக மூலோபாயக் கற்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் ஆ.யதீந்திரா கலந்து கொண்டார்.

இதன்போது, இலங்கையினுடைய வெளி நாட்டுக் கொள்கைகள் மற்றும் இராஜதந்திர செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுப டுத்தப்பட்டதுடன் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றின் இராஜதந்திர அரசியல் கொள்கைகள் மூலம் சர்வதேச உறவுகள்,ஏனைய நாடுகளின் உதவி ஏன் தேவை போன்ற விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டன. இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அனுமதிப்பத்திரமின்றி மதுபான போத்தல்களை எடுத்துச் சென்ற இருவர் சவளக்கடையில் கைது

(பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற மதுபான போத்தல்கள் சவளக்கடை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம், சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பியர் மற்றும் மதுபான போத்தல்கள் முச்சக்கரவண்டியொன்றினூடாக வெல்லாவெளி பகுதிக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்யப்படுவதாக சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான டீ.எம்.எஸ்.கே. தசநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினையடுத்து செவ்வாய்க்கிழமை(02) சோதனை நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, முச்சக்கரவண்டியொன்றில் சுமார் 33, 38 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்த 175இற்கும் அதிகமான மதுபான போத்தல்கள் மற்றும் பியர் ஒரு தொகுதி என்பன சூட்சுமமாக மறைத்து எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழுவினர் 2 சந்தேக நபர்களை கைது செய்ததுடன் முச்சக்கரவண்டி மற்றும் மதுபான போத்தல்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மதுபான போத்தல்கள் சுமார் பல இலட்சம் பெறுமதியானவை எனவும் அளவுக்கு அதிகமான மதுபான போத்தல்களை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் உரிய அனுமதி இன்றி சட்டவிரோதமாக பதுக்கிக்கொண்டு சென்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும், கைதான இரு சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# அங்குரார்ப்பண நிகழ்வும் சாதனையாளர் கௌரவிப்பும்





(மூதூர் செய்தியாளர்)

திருகோணமலை, வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பின்தங்கிய 5 தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 'மகிழ்வோம் மகிழ்விப்போம்' எனும் தொனிப்பொருளின் வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வும் சாதனையாளர் கௌரவிப்பும் திங்கட்கிழமை(01) பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வெருகல் பிரதேச பல்கலைக்கழக மாணவர்கள் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். 05 வருட திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிகழ்வை ஸ்பெய்ன் நாட்டில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரும் இவ் வேலைத்திட்டத்தின் உறுதுணையாக இருந்த நேதாஜியின் தாயார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்கள் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். ஈச்சிலம்பற்று கோட்டக் கல்விப்பணிப்பாளர், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பூநகர் பிரதேச சமூக மட்டத் தலைவர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.





மர்ஹூம் சொல்லன்பன் நஸுருத்தீனின் நினைவேந்தலும் அவரின் 'புலால்வாசம்' நூல் வெளியீட்டு நிகழ்வும் மின்னல் வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் இஸட்.எம். நிலாம் (நளீமி) தலைமையில் ஒலுவில் அல்-ஹம்றா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை(01) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதி எம்.எம்.பாசில் கலந்துகொண்டிருந்தார். கவிஞர்களான சோலைக்கிளி, பாலமுனை பாரூக், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (திராய்கேணி செய்தியாளர்)

# மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்களுக்கு தங்கப்பதக்கம்



(வெல்லாவெளி செய்தியாளர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களுக்கிடையில் நடத்தப்பட்ட 'விஞ்ஞானக்கல்வியை ஊக்குவித்தல்' எனும் திட்டத்தின்மூலம் மும்மொழியிலும் விஞ்ஞான வினா விடைப்போட்டி கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையில் மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது.

தரம் 6 தொடக்கம் 11 வரையுள்ள மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட குறித்த போட்டியில், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த ந.விஷால் மற்றும் உ.துவாரகேஸ் ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டனர்.

மேலும் இப்போட்டியில் கல்லூரியைச் சேர்ந்த 8 மாணவர்கள் பங்குபற்றி வெண்கலம், வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்கள். இப்பாடசாலையைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்களும் மாகாணக்கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டன.

இப்போட்டிக்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் கல்லூரி அதிபர் இராசதுரை பாஸ்கர் மற்றும் விஞ்ஞானப் பாட ஆசிரியர்களான கௌசல்யா விநாயகமூர்த்தி, திருமதி கிருஸ்ணா தேவகுமார், தர்மினி துளசிதாசன், இரா.வரதராஜா, பீ.யோகா னந்தன் ஆகியோர் வழங்கி போட்டியில் வெற்றிபெறச் செய்துள்ளதுடன் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஒலுவில் கல்விசாரா ஊழியர்களின் நலன்புரி அமைப்பு உதயம்



(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஒலுவிலைச் சேர்ந்த கல்விசாரா ஊழியர்கள் ஒன்றிணைந்து "UNIVERSITY STAFF WELFARE ASSOCIATION" (USWA) எனும் நலன்புரி அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு திங்கட்கிழமை(01) இடம்பெற்றது.

இவ்வமைப்பின் நிறைவேற்றுக்குழு தலைவராக எம்.எம்.எஸ்.எம்.இர்பான், பிரதித் தலைவராக கே.எம்.சபீக், செயலாளராக எம்.எல்.ரினோஸ், பிரதிச் செயலாளராக யூ.எல்.எம்.யாஸீர், பொருளாளராக ஏ.எம்.ரினோஸ், கணக்காய்வாளராக எம்.ஏ.எல். அதீல் ஆகியோர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக எம்.ஐ.எம்.முசாக்கிர், எம்.எஸ்.எம்.பஹத், ஏ.எல்.பைசால், எம்.ஐ.நிசார், ஐ.எல்.எம்.ருக்சான், கே.எம்.அசீம் மற்றும் ஐ.எம்.மௌஜூம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக ஏ.எல்.சதகதுல்லாஹ், ஜே.ஆப்தீன் மற்றும் எஸ்.எல்.அஹ்மத் லெப்பை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் சுமார் 50க்கு மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டு அமைப்பின் அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



கல்குடா அறபா நகர் முகைதீன் அப்துல் காதர் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வித்தியாரம்ப விழா அதிபர் ஏ.யூ.எம்.நளீம்(ஸலாமி) தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்குடா மத்தி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.அஜ்மீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அஹ்ஸாப், அதிபர்களான ஏ.மீராமுகைதீன், எம்.எச்.எம்.இஸ்மாயில், ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.ரி.எம்.அஸ்ரப், ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஏ.காதர், ஓய்வு நிலை அதிபர் ஏ.எல்.நெய்னா முஹமட் உட்பட ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை சமூகம், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(பாண்டிருப்பு செய்தியாளர்)

# தம்பிலுவிலில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு





(மாளிகைக்காடு செய்தியாளர்)

பாடசாலை மட்டத்தில் சுகாதாரம் குறித்த போட்டி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அதனுடன் இணைந்ததான விழிப்புணர்வு மேடை நிகழ்ச்சி மற்றும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில்(26) தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கனடா இஸ்லாமிக் ரிலீஃப் நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கை இஸ்லாமிக் ரிலீஃப் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தற்காலத்தில் மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் அதற்காக கல்முனை சுகாதார பிராந்தியமும் அதன் பணிப்பாளரும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி அதனை வெற்றிகரமாக அமுல்படுத்தும் முறைமை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இலங்கை இஸ்லாமிக் ரிலீஃப் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் வை.பி. ஹுசைன் மற்றும் அதன் பதவி நிலை உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள், பாடசாலை கல்வி சமூகத்தினர் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில், மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் விழிப்புணர்வு நாடகங்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கேற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்

## இலங்கை அரச பொதுச்சேவை சங்கத் தலைவர் கோரிக்கை




(பாறுக் ஷிஹான்)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை 20ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை அரச பொதுச் சேவைகள் சங்கத்தின் தலைவர் எஸ். லவகுமார் தெரிவித்தார்.

கல்முனை தனியார் விடுதியில் திங்கட்கிழமை(01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2000க்கு அமைவாக, கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஆலோசனைக் குழுக்களை தவிர்ப்பதன்மூலம் அவற்றின் காரியத் திறனையும் உற்பத்திப் பெருக்கத்தையும் மேம்படுத்த செய்தல் வேண்டும். கிழக்கு மாகாணத்துக்குட்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரச பஸ்களில் பயணிப்பதற்கான இலவச பஸ் பாஸ் நடைமுறையை அமுல்படுத்துமாறு மாகாண ஆளுநரை கோரல், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் பெண் அரச அலுவலர்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஒரு நாள் விசேட விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் விவகார அமைச்சர் மற்றும் அரச நிர்வாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரை கோரல், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச சேவையாளர்களுக்கென தனியான வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வீடமைப்பு அமைச்சை கோரல், வெளிக்கள கடமையில் ஈடுபடும் அரச சேவையாளர்களுக்கு கடந்த ஆட்சியின்போது சலுகை விலையில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மேற்பார்வை தரத்திலான விசேட தர பதவியணியை ஏற்படுத்துவதன்மூலம் அச் சேவையை வினைத்திறன் மிக்கதாக அரச நிர்வாகத்துக்கு பயனுள்ள வகையில் மாற்றியமைக்க கோரல் ஆகியன உட்பட 14 அம்சக் கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டதுடன் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர், வீடமைப்பு அமைச்சர், மகளிர் விவகார அமைச்சர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இலங்கை அரசாங்கம் பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.புஹாது, பொருளாளர் க.நடராஜா, பிரதிப் பொதுச் செயலாளர் ஏ.சிபான், தாய் சங்க மத்திய குழு உறுப்பினர்களான பி.கோகுலோஜன், எஸ்.எல். பசீல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடி பிரதேசத்தில் டெங்கு களப் பரிசோதனை





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரித்துள்ளதால் அதனை கட்டுப்படுத்தும் நோக்கில், மக்கள் தொகை செறிவாகக் காணப்படும் காத்தான்குடி பிரதேசத்தில் பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழ் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்கு கள பரிசோதனையை கடந்த செவ்வாய்க்கிழமை (25)முதல் முன்னெடுத்துள்ளனர்.

இவ் டெங்கு கள விஜயமானது, புதிய காத்தான்குடி அன்வர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நூறாணியா பள்ளிவாசல் முன்பாகவுள்ள 316 வீடுகளுக்கு சென்று சூழல் தொடர்பான கண்காணிப்பை மேற்கொண்டதுடன் புதிய காத்தான்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் முன்பாகவுள்ள 320 வீடுகளுக்கு சென்று கண்காணிப்புகளை மேற்கொண்டனர்.

டெங்கு கள விஜயம் பிரதேச செயலக கள உத்தியோகத்தர்களால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மாணவ சமுதாயத்துக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாம்

## மட்டு. சிவில் சமூக அமைப்பினர் வேண்டுகோள்

(மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்)




எதிர்காலத் தலைவர்களாக மிளிரவிருக்கின்ற மாணவ சமுதாயத்தின் கல்வி நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாமென மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எழுதி தமது கல்வி நடவடிக்கையின் அடுத்த கட்ட இயங்குதலுக்காய் காத்திருக்கும் மாணவர்களின் நன்மை கருதி நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியை காலதாமதமாக்காமல் கையாளுதல் மிகவும் அவசியமானதாகும். ஏற்கனவே உயர்தரப் பரீட்சையும் தாமதித்து நடைபெற்றுள்ள நிலையில் பரீட்சைவிடைத்தாள் திருத்தும் பணிகளை தாமதப்படுத்தல் எமது மாணவ சமுதாயத்தின் கல்வி நடவடிக்கைக்கு குந்தகமாய் அமையும் என்பதை எமது அமைப்பு மிக வேதனையோடு தெரிவிக்கின்றது. எனவே, சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியோடு தொடர்புபட்ட அனைவரும் எமது இளந்தலைமுறையின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகளை துரிதப்படுத்தி மாணவர்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



வடக்கு ஆளுநராக ஜோன்
அமரதுங்கவ நியமிக்கிறதாக
ஒரு கத அடிபடுது எலுவா?
அப்ப கிழக்கு ஆளுநர் ஆராம்?
அந்த காணிபுடிக்க நியமித்த
பொம்புளயத்தான் நரிலும்
வைச்சிக்க போறாரோ.?
ரெண்டு புள்ளங்களோட சிங்கள
பள்ளியதுறந்து மட்டக்களப்புல
சாதன படைத்தவ எலுவா
அந்த நோனா.. அவ கோட்டாட
காலம்தொடக்கம் நரிட காலம்
வரையும் கிழக்க நாசமறுக்கிறதில
கில்லாடி!

# இனப்பிரச்சினையை தீர்க்கவுள்ளதாக கூறி சர்வதேச உதவியை பெற ஜனாதிபதி முயற்சி

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன்



(எருவில் செய்தியாளர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மெய்நிகர் வழியாக உரையாற்றியிருந்தார். அதன்போது இந்த ஆண்டுக்குள் இனப்பிரச்சினையைத் தீர்க்க உள்ளதாக மீண்டுமொரு உத்தரவாதத்தை அவர் அளித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவாதம் அவ்வாறே நிறைவேற்றப்படுமா? நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகள் தேவை. அந்த உதவிகளைப் பெறுவதற்காகவே இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக அடிக்கடி ஜனாதிபதி கூறி வருகின்றார் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இவ்அறிவிப்பு தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

முன்பும் ஒரு தடவை, இவ்வாண்டில் சுதந்திர தினத்துக்கு முன்பாக இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக குறிப்பிட்டிருந்தார். அதனைக் கேட்டவுடன் பௌத்த பிக்குகள் வழமைபோல் எச்சரிக்கை விடுத்தார்கள். 13ஆவது திருத்தத்தையே அகற்ற வேண்டும் என்று கொக்கரித்தார்கள். அதனோடு ஜனாதிபதி அக்கதையை நிறுத்திவிட்டார்.

இப்போது மீண்டும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக கூறியுள்ளார். கடந்த 2015இல் அமைக்கப்பட்ட நல்லாட்சிக் காலத்திலும் சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க இனப்பிரச்சினைக்கான தீர்வை காண்பேன் என்று கூறினார். அரசியல் யாப்பு நிர்ணய சபையையும் அமைத்தார். முயற்சிகள் போன்ற பாவனைகளும் நடந்தேறின. பின்னர் மைத்ரி - மஹிந்த தரப்பினரின் பாராளுமன்றக் குழப்ப முயற்சியுடன் 2018ஆம் ஆண்டுடன் தீர்வு முயற்சி கைவிடப்பட்டது. அன்றைய காலத்தில் ரணிலுக்கு என்று 106 இற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் பூரணமான ஆதரவை வழங்கியிருந்தனர்.

அப்படியான சூழலையே அன்றைய பிரதமராக இருந்த ரணில் விரைவாக பயன்படுத்தவில்லை. இவையெல்லாம் கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களாகும். அப்படியிருக்க, தனிமரமாக மஹிந்த தரப்பினரின் ஆதரவில் ஜனாதிபதியாக வந்துள்ள ரணிலால் இந்த ஆண்டுக்குள் எப்படி இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்? அதுவும் சகல கட்சிகளதும் ஆதரவுடன் தீர்வைக் காண்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும்.

13ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தையே முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை ஆட்சியாளர்களால் முடியவில்லை. அதற்கு மேலாக எந்தத் தீர்வையும் தமிழ் மக்களுக்காக முன்வைக்கக்கூடிய ஆளுமை ஆட்சியாளர்களிடம் இல்லை என்பதுதான் வரலாறு கற்றுத்தந்த படிப்பினையாகும்.

இலங்கையில் பேரின அடிப்படைவாதம் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளவரை தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது சிங்களத் தலைவர்களால் முடியாத காரியமாகும். ஆனால், தேசிய இனப்பிரச்சினையை நியாயமாகத் தீர்ப்பதை தமிழ்மக்கள் மனப்பூர்வமாக விரும்புகின்றார்கள் என்பது உண்மையான விடயமாகும் என்றார்.

# இரு தினங்களில் இருவர் தூக்கிட்டு தற்கொலை

## மட்டு. பொலிஸ் பிரிவில் சம்பவம்

(மண்டூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் மற்றும் காத்தான்குடி பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரு தினங்களில் இருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, பெரிய உப்போடைப் பிரதேசத் தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ஜெயபாலன் ரொய்ராயு (வயது37) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை(30) குடும்பத்தகராறு காரணமாக தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்நிலையில் திங்கட்கிழமை(01) தாழங்குடா-03 ஐச் சேர்ந்த லவகுமார் அகதாஸ் (வயது20) காதலித்து வந்தநிலையில், காதலி தனது காதலை இடைநிறுத்திக் கொண்டதனால் கடிதமொன்றினை எழுதி வைத்து விட்டு தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கஞ்சா சுருட்டு வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கஞ்சா கலந்த சுருட்டு வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கிணங்க உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேக நபரை கைது செய்ததுடன் அவரிடமிருந்த கஞ்சா கலந்த சுருட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(02) ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# கிழக்கின் தலைவிதியை தீர்மானிக்கின்ற தலைவர்களை உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து தெரிவு செய்வோம்

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

(மட்டக்களப்பு செய்தியாளர்)

வட பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்ற முடிவு கிழக்கு மாகாணத்தில் சாத்தியமில்லை என்று துரத்தியடிக்கின்ற ஒரு அரசியல் இயக்கமாக நாம் பலம் பெறவேண்டும். கிழக்கு மாகாணத்தின் அடுத்த கட்ட தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தலைவர்களை, உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து கண்டுபிடித்து அவர்களைத் தலைமையாக்குவதே எமது கட்சியின் முக்கிய பணியாகும். அண்மையில் என்னை ஏளனம் செய்தார்கள். அவர்கள் ஏளனம் செய்தாலும், நாம் வந்த வழிகளை என்றும் மறப்பது கிடையாது என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தினக் கூட்டம் திங்கட்கிழமை(01) மட்டக்களப்பு களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

75வருடகால வரலாற்றிலே யாழ்ப்பாணத் தலைவர்கள் எடுத்த முடிவின் தோல்வி காரணமாக பலவீனப்பட்டிருக்கின்றது எமது சமூகம். அந்த பலவீனத்தையும் கட்டியெழுப்பிக்கொண்டு, 75 ஆண்டுகால வரலாற்றிலே எங்களை முந்தி நிற்கின்ற கல்வித்துறையையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்த வேண்டிய மிகப் பெரிய சவாலுக்குள் நிற்கிறோம். இந்நிலையில், கிழக்கிலுள்ள எமது மக்களின் இருப்பு, கலை, கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்புமிக்க கட்டத்திலும் நாம் நிற்கின்றோம்.

மீண்டும் மீண்டும் இனவாதப் பேச்சுகளைப் பேசுகின்ற கூட்டம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. பட்டிருப்புத் தொகுதியில் கடந்த காலங்களில் இருந்தவர்கள் பாலம் வேண்டாம் சிங்களவர்கள் வந்து விடுவார்கள், தமிழர்களை சிங்களம் கற்க வேண்டாம் என தெரிவித்தவர்கள், தற்போது அவர்களின் வாரிசுகள் வந்து அவர்கள் எதையெல்லாம் வேண்டாம் என்று சொன்னார்களோ அதற்கு தலைகீழாக மாறி அதனையெல்லாம் பயன்படுத்தி எமது மக்களை பகடைக்காயாக பாவிக்கின்ற சூழல்தான் தற்போது மட்டக்களப்பு அரசியலில் மாறியிருக்கின்றது.

இவ்வாறான சதிகளிலிருந்து எமது மக்களைக் காத்துக் கொள்வது எமது மண்ணுக்கான மாண்மியத்தை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்பது தொடர்பில் மிகக் கச்சிதமாகச் சிந்தித்து முன்னேற வேண்டிய காலகட்டத்தில்தான் நாங்கள் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம்.

காணிப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல், பட்டிருப்பு பாலம் தற்போது உடைந்து விழும் அபாயத்தில் உள்ளது. எனவே நான் பொறுப்பு மிக்க அமைச்சர் என்ற ரீதியில் பட்டிருப்பு பாலத்தையும் சந்திவெளி பாலத்தையும் வெளிநாட்டுத் திட்டத்தின் கீழ் செப்பனிடுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றேன்.

தற்போதைய அரசாங்கத்தினூடாக அடுத்து வருகின்ற வருடங்களில் கல்வி, பொருளாதார நிலைமைகளையும் நாங்கள் மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றோம். எனவே எமது மக்கள் சலித்து விடவேண்டாம். மக்களுக்கு வாக்குறுதியளித்தது போன்று நாம் கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்தை தொடர்ந்து பாதுகாப்போம்.

மக்கள் எமக்களித்த வாக்கின் பிரகாரம் தற்போது நான் அரச பிரதிநிதி என்ற அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறுகின்ற அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்படுவேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கட்சி அடைய முடியாத இலக்குகளுக்காகப் போராடாமல் மக்களை இரத்தம் சிந்த வைக்காமல் ஜனநாயக ரீதியாகப் போராடி கையிலே இருக்கின்ற மாகாணசபைக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற விடயங்களில் கவனம் செலுத்துமே தவிர இன்னுமே மக்களை மடையர்களாக்குகின்ற செயல்பாடுகளுக்கு கட்சி ஆதரவு வழங்காது என்றார்.



# உக்ரைன் தாக்குதலில் 20 ஆயிரம் ரஷ்ய துருப்புகள் உயிரிழப்பு



உக்ரைன் போரால் டிசம்பர் மாதம்முதல் தற்போதுவரை 20 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அமெரிக்கா கணித்துள்ளது.

இதேவேளை, உக்ரைன் மீது ரஷ்யா மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. ஏவுகணை வீசி கிழக்கு நகரில் கடும் தாக்குதலை முன்னெடுத்தது.

உக்ரைனின் கிழக்கு நகரான பவ்லோஹாா்ட் நகர் மீது ரஷ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 34 பேர் காயமடைந்துள்ளனர். மேலும் பல வீடுகளும் சேதமடைந்தன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2022 பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் இன்று 434ஆவது நாளாகவும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

உலக செய்திகள்

போரால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் கார்கீவ், மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன. பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், 16 மில்லியனுக்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. உக்ரைனுக்குத் தேவையான ஆயுத உதவியை வழங்கிவரும் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ரஷ்யா - உக்ரைன் அமைதி பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்று இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஆயுத உதவியால் இந்தப் போர் பல மாதங்களாக நீடித்து வருகிறது.

இந்நிலையில், கடந்த டிசம்பர் மாதம்முதல் தற்போதுவரை உக்ரைன் போரில் 20 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அமெரிக்கா கணித்துள்ளது. அதேவேளை, போர் தொடங்கியது முதல் கடந்த நவம்பர் மாதம் வரை ஒரு இலட்சம் ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது படுகாயமடைந்திருக்கலாம் என்று அமெரிக்கா ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மே 6இல் முடிசூட்டு விழா:

# மன்னர் சார்ள்ஸுக்காக தங்கத்தில் தயாராகும் ஆடை

உலகமே எதிர்பார்த்துக்கொண்டிருந்த பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்காக லண்டன் நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.








இந்நிலையில், மன்னர் சார்ள்ஸ், முடிசூட்டு விழாவின்போது அணியவிருக்கும் நூற்றாண்டு பாரம்பரியமிக்க தங்கத்திலான ஆடைகள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் எதிர்வரும் 6ஆம் திகதி முடிசூட்டு விழா நடைபெறவுள்ளது. அதில் மன்னர் சார்ள்ஸ் இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆடைகளை அணியவிருக்கிறார்.



இதில் ஓர் ஆடை 1821ஆம் ஆண்டு அப்போதைய மன்னர் 4ஆம் ஜோர்ஜுக்காகவும், மற்றொன்று 1911ஆம் ஆண்டு மன்னர் 5ஆம் ஜோர்ஜுக்காகவும் வடிவமைக்கப்பட்டது.

இந்த ஆடைகளை ராணி எலிசபெத் அவரது முடிசூட்டு விழாவின்போது அணிந்திருந்த நிலையில், 70 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த ஆடைகள் மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் பயன்படுத்த தயாராகி வருகின்றன.





பிரிட்டனில் நீண்டகாலமாகத் தலைமைப் பொறுப்பிலிருந்த மகாராணி எலிசபெத் கடந்தாண்டு மறைந்த நிலையில், அவரது மகன் சார்ள்ஸ் மன்னர் பதவிக்கு வந்தார். மன்னர் பணிகளை அவரே கவனித்து வருகிறார். இருப்பினும், அவருக்கு முடிசூட்டு விழா இன்னும் நடைபெறவில்லை. அவருக்கு எதிர்வரும் 6ஆம் திகதி முடிசூட்டு விழா கோலாகலமாக நடைபெறவுள்ளது.

70 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் முடிசூட்டு விழா என்பதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இன்னும் சில நாட்களில் முடிசூடவுள்ள மன்னர் சார்ள்ஸின் சொத்து மதிப்பு குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டாம் எலிசபெத் மகாராணி கடந்த ஆண்டு செப்டெம்பரில் உயிரிழந்தபோது அவரது மகனுக்கு 360 மில்லியன் பவுண்ட்கள் (சுமார் ரூ. 3,600 கோடி - இந்திய ரூபா பெறுமதியில்) விட்டுச் சென்றார். இதன்மூலம் சார்ள்ஸின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு 600 மில்லியன் பவுண்ட்களாக (ரூ. 6,100 கோடி) உயர்ந்துள்ளது.

மத்திய லண்டனிலுள்ள புகழ்பெற்ற பெக்கிங்ஹாம் அரண்மனை மற்றும் தலைநகரின் மேற்கிலுள்ள வின்ட்சர் கோட்டை ஆகியவை அரசுக்குச் சொந்தமானது. மேலும், பிரிட்டிஷ் முடியாட்சியின் வரலாற்றுச் சின்னமான கிரவுன் ஜூவெல்ஸ் பிரிட்டன் அரசுக்குச் சொந்தமானது. அவை எல்லாம் மன்னர் சொத்து மதிப்பில் வராது. இந்த நகைகள் மட்டும் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபா மதிப்புகளைக்கொண்டது.

இது தவிர, இறையாண்மையாக என்று மன்னர் சார்ள்ஸுக்கு ஆண்டுதோறும் 'இறையாண்மை மானியம்' கிடைக்கும். இது கிரவுன் எஸ்டேட் மூலம் கிடைக்கும் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கின் தொகுப்பாகும். இதன்மூலம் 2021-22இல் 880 கோடி ரூபா கிடைக்கும்.. இது தவிர, வேறு சில வழிகளிலும் மன்னருக்கு வருமானம் கிடைக்கும்.

ஒட்டுமொத்தமாகச் சேர்த்துப் பார்க்கும்போது மன்னரின் சொத்து மதிப்பு 1.8 பில்லியன் பவுண்ட்கள், அதாவது 1.83 இலட்சம் கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னரே சொன்னதுபோல, இது மன்னரின் தனிப்பட்ட சொத்து மட்டுமே.

***(ஒட்டுமொத்தமாக அரச குடும்பச் சொத்து மதிப்பைக் கணக்கிட்டால்...)***

# எண்ணெய்க் கப்பலில் தீ: 3 பணியாளர்கள் மாயம்



தெற்கு மலேசிய கடற்பகுதியில் எண்ணெய்க் கப்பலொன்று தீப்பற்றிய நிலையில், அதிலிருந்த பணியாளர்கள் 3 பேர் காணாமல்போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காபோனில் பதிவுசெய்யப்பட்ட எம்.டி. பாப்லோ என்ற எண்ணெய்க் கப்பல், 28 பணியாளர்களுடன் சீனாவிலிருந்து சிங்கப்பூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. திங்கட்கிழமை மாலை மலேசியாவின் Tanjung Sedili கடற்பகுதியில் சென்றபோது, கப்பலில் திடீரென தீப்பற்றி கரும்புகை எழுந்தது.

தகவலறிந்த மலேசிய கடலோரக் காவல்படையினர், ரோந்து படகில் சென்று 25 பணியாளர்களை மீட்டனர். எஞ்சிய 3 பேரை தேடும் பணிகள் தொடரும் நிலையில், தீ விபத்து குறித்து விசாரணை நடைபெறுகிறது.

# ஆசிய கண்டத்தின் மிகவும் ஆழமான எண்ணெய்க் கிணறு



ஆசிய கண்டத்திலேயே மிகவும் ஆழமான எண்ணெய்க் கிணற்றை துளையிடும் பணியை சீனாவின் சினோபெக் (Sinopec) நிறுவனம் தொடங்கியுள்ளது.

எண்ணெய் வளம் நிறைந்த டாக்லமக்கான் பாலைவனத்தில் பூமிக்கடியில், சுமார் 31 ஆயிரம் அடி ஆழத்திற்கு எண்ணெய் மற்றும் எரிவாயு கிணறு அமைக்கப்பட்டு வருகிறது.

யூஜின் என பெயரிடப்பட்டுள்ள இந்த எண்ணெய்க் கிணறு, 6 மாதங்களில் கட்டி முடிக்கப்படும் என சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது. எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்துடன் ஒப்பிடுகையில், இந்தக் கிணறு அதை விட 2,000 அடி அதிக ஆழம் கொண்டது எனக் கூறப்படுகிறது.




**ஏப்ரல் 10ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ அணி இறுதிப்பந்தில் த்ரில் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து அந்த அணியின் மெண்டர் கௌதம் கம்பீர் பெங்களூர் ரசிகர்களை நோக்கி வாயை மூடுமாறு சைகை காட்டியிருந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் விராட் கோஹ்லி, கம்பீருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வாயை மூடுமாறு சைகை காட்டினார். இது இணையத்தளங்களில் வைரலாகி வருகிறது.**

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# கம்பீர் - கோஹ்லி - நவீன் மைதானத்தில் மோதல்



## மூவருக்கும் அபராதம்

லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியின் பின்னர் மோதலில் ஈடுபட்ட விராட் கோஹ்லி, கௌதம் கம்பீர் மற்றும் நவீன் உல்ஹக் ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 126-9 ஓட்டங்களை மட்டும்தான் சேர்த்தது. 127 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை துரத்திக் களமிறங்கிய லக்னோ அணியில் யாருமே 30க்கும் மேற்பட்ட ஓட்டங்களை அடிக்காததால் இறுதியில் லக்னோ அணி 108-10 ஓட்டங்களை மட்டும் சேர்த்து 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது.

இப்போட்டியில் அமித் மிஸ்ரா, நவீன் உல்ஹக் ஆகியோர் விளையாடிக் கொண்டிருக்கும்போது விராட் கோஹ்லி இந்த இருவருடனும் ஸ்லெட்ஜிங்கில் ஈடுபட்டார். அப்போதே நவின் உல்ஹக்கும் கோஹ்லியும் முறைத்துக்கொண்டு நின்றிருந்தனர். இதனைத் தொடர்ந்து இப்போட்டி முடிந்த பிறகு கோஹ்லி ஆக்ரோஷமாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

தொடர்ந்து இரு அணி வீரர்களும் கைகொடுக்க வரிசையில் வந்தனர். அப்போது கைல் மேயர்ஸ் கோஹ்லியிடம் நடந்த விடயங்கள் குறித்து அதிருப்தியுடன் பேசிக்கொண்டே வந்தார். தொடர்ந்து நவீன் உல்ஹக் கோஹ்லியிடம் கைகொடுக்கும்போது அவரது கையை பிடித்துக்கொண்டே நவீன் கோபத்தோடு ஏதோ சொன்னார். இதனைத் தொடர்ந்து நவின் உல்ஹக்கிற்கு ஆதரவாக கோஹ்லி பேச ஆரம்பித்தார்.

இதனால் களத்திலேயே கோஹ்லி, கம்பீர் இருவரும் ஆக்ரோஷமாக சண்டையிட ஆரம்பித்தனர். இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், கோஹ்லி, கம்பீர், நவீன் உல்ஹக் ஆகியோருக்கு பி.சி.சி.ஐ. தண்டனை அறிவித்துள்ளது. கோஹ்லி, கம்பீர் இருவருக்கும் போட்டிக்கான 100 சதவீத தொகை அபராதமாகவும் நவீனுக்கு 50 சதவீதம் அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளன.

# வரலாற்றில் முதல் முறையாக ஆசியக் கிண்ணத்தில் ஆடவுள்ள நேபாளம்



2023 ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடும் ஆறாவது அணியாக வரலாற்றில் முதல் முறையாக நேபாள கிரிக்கெட் அணி தகுதி பெற்றுள்ளது.

ஆறு அணிகள் பங்குபெறும் இந்தத் தொடருக்கு ஐ.சி.சியின் முழு அங்கத்துவத்தைக் கொண்டிருக்கும் நாடுகளான தொடரின் நடப்புச் சம்பியன் இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் நேரடித் தகுதி பெற்றிருந்தன.

இந்நிலையில், தொடரில் பங்கெடுக்கும் எஞ்சிய அணியை தெரிவுசெய்வதற்காக ஆசிய கிரிக்கெட் கவுன்சில், ஆசிய பிரீமியர் கிண்ணம் என்னும் பெயரிலான தகுதிகாண் ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. ஏப்ரல் மாதம் 18ஆம் திகதியிலிருந்து நேபாளத்தில் நடைபெற்று வரும் இந்தத் தகுதிகாண் தொடரில் மொத்தம் 10 அணிகள் பங்குபற்றியிருந்ததோடு, தொடரின் இறுதிப் போட்டிக்கு ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் நேபாள அணிகள் தெரிவாகின.

இதில் நேபாளம் வெற்றிபெற்று ஆசியக் கிண்ணத் தொடரின் குழு 'ஏ'இல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்தது. குழு 'பி'இல் இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் காணப்படுகின்றன. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஒருநாள் போட்டிகளாக குறித்த தொடர் நடைபெறவுள்ளது.

**TATA IPL**

**இன்றைய போட்டிகள்**

**போட்டி இல. - 45**
**லக்னோ எதிர் சென்னை**
**நேரம் - மாலை 3.30**
**இடம் - லக்னோ**

**போட்டி இல. - 46**
**பஞ்சாப் எதிர் மும்பை**
**நேரம் - இரவு 7.30**
**இடம் - மொஹாலி**

# சமூகங்களிடையே மத்தியஸ்தத்தை ஏற்படுத்தும் முகமாக சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி

**(மூதூர் நிருபர்)**

சமூகங்கள் மத்தியில் மத்தியஸ்தத்தை ஏற்படுத்தி சுமுகமான உறவை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தின் அடுத்தகட்டமாக சேனையூர் ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகத்துக்கும் சந்தோசபுர ஒலி ஒளி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி முதலாம் திகதி சந்தோசபுர பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சேனையூர் ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் வெற்றிவாகை சூடியது. அத்தோடு இங்கு





இரு அணியினருக்கும் இடையில் சிநேகபூர்வ உரையாடல்களும் இடம்பெற்றதோடு இதனை ஏற்பாடு செய்து சுமுகமான உறவை ஏற்படுத்திய ACTIVE CITIZENS மூதூர் குழுவுக்கு நன்றிகளையும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வுக்கு விசேட விருந்தினர்களாக ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகத் தலைவர்கள், ஒலி ஒளி விளையாட்டுக் கழகத் தலைவர்கள், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்கள், பழங்குடியின அமைப்பின் தலைவர், பொருளாளர் மற்றும் இந்த செயற்றிட்ட குழுவான ACTIVE CITIZENS - MUTTUR குழு உறுப்பினர்களான T.M.HUSHAM, HARISANGAR, THATHURSAN, IMRAN NAZEER , JILFANA மற்றும் Muslim Aid SEDR செயற்றிட்ட District coordinator M.Roshinton & Mender ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிபெற்ற அணிக்கு பரிசில்களை வழங்கினர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7